சந்தாதாரரின் கவனத்திற்கு :
காவலன்
வருட சந்தா ரூபா 9-00
6 மாத „ „ 4-50
3 மாத „ „ 2-25
(தபாற் செலவு உட்பட)


# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.

இன்பத்தின் நிழல் தான் துன்பம். அது போன்றே சிரிப்பொலியின் நிழல்தான் அழுகுரலும். —சங்கர்சன்

94-ம் புத். | 1969-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 27-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 37-ம் இல.

# திருச்சபை முறைகளைக் கைநெகிழ்பவருக்கு பாப்பரசரின் எச்சரிக்கை



திருச்சபையின் பாரம்ரிய முறைகளை அலட்சியம் செய்து, அதிகாரிகளினுல் அனுமதிக்கப்படாத புது முறைகளைப் புகுத்த முயற்சி செய்பவர்களை சென்ற வாரம் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் காரசாரமாகக் கண்டித்திருக்கின்ருர். இப்படியானவர்கள் திருச்சபைக்கு வெளியே தங்களை நிறுத்திக் கொள்கின்ருர்கள் என்ருர் பரிசுத்த தந்தை. இத்தகைய பாதை ஆக்கப் பாதையன்று, அது அழிவுப் பாதை என துக்கத்தோடு குறிப்பிட்டார் பரிசுத்த தந்தை.

இவ்வாறு அவர் கண்டித்தது திருச்சபையின் போதனு கருமங்களில் தத்தம் மனம்போன போக்கில் மாற்றங்களைப் புகுத்த முயற்சிப்பவர்களை அன்றி, திருச்சபையின் வளர்ச்சிக்காக ஆட்சி முறையிலோ, வழிபாட்டு முறையிலோ மாற்றங்களைக் காண விரும்புவர்களை யன்று.

## தற்கொலைசெய்ய முயன்றவனை தடுத்த குருவானவர்

ஐக்கிய அமெரிக்க தேசத்தில் டலவாறெ ஆற்ருேரத்திலுள்ள பெஞ்சமின் பிருங்ளின் பாலத்தின் உயர்பகுதியில் ஒருவன் ஏறிக்கொண்டிருப்பதை அத்தெருவில் மோட்டோர்காரில் சென்றுகொண்டிருந்த வண. பார்ணி சுவாமியார் கண்ணுற்றதும், தமது மோட்டோர் இரதத்தை ஒரு பக்கம் நிறுத்தி அம்மனிதனுடன் தொடர்புகொண்டார். அவன் தன் காதலியுடன் பிணக்குற்று தற்கொலைசெய்ய முயற்சிப்பதை அறிந்த குருவானவர் அவனுக்கு அச்செயலின் மடைத்தனத்தை எடுத்துக்காட்டி அவனது மனதை மாற்றிவிட்டார். ஆனுல், அவன் பாலத்தின் உயரக்கிடந்த கம்பிகளில் ஏறிக்கொண்டிருந்ததைப் பார்த்துப் பராக்குக் கொண்டதால் அந்நேரத்தில் பல மோட்டோர் விபத்துகளும் நடந்தேறிவிட்டனவாம்.

## "விஞ்ஞானசாஸ்திர புதுமைகள் சமயவளர்ச்சிக்குத் தடையல்ல"

"சென்ற 300 வருடங்களாக மனிதன் படிப்படியாக இயற்கையின் மர்மங்களை அறிந்து வெளிப்படுத்திவருகிருன். இயற்கையின் அறிவு பற்றியவளர்ச்சி சமயஉண்மைகளை அகற்றிவிட முடியாது. இயற்கைக்குக்காரணமாகிய தேவனே சமயத்துக்கும் கர்த்தாவாக இருக்கிருர் என்பதை நாம் மறந்துவிடமுடியாது. நாம் சில காலங்களுக்குமுன் விளங்கிக்கொள்ள முடியாதிருந்த இயற்கை மர்மங்கள் இப்போது தெட்டத்தெளிவாகிவிட்டன; இவை எவையும் சமயஉண்மைகளுக்கு முரண்பட்டனவல்ல. ஆகையால் நாம் விழிப்பாக இருந்து நவீனவிஞ்ஞான சாஸ்திரம் வெளிப்படுத்தும் உண்மைகளை நன்றியறிவுடன்பெற்று அவை சமயபோதனைகளுடன் எவ்வாறு ஒத்துப்போகின்றன என ஆராய்ச்சி செய்யவேண்டும்." இவ்வாறு இங்கிலாந்தில் பிரித்தானிய சங்க அங்கத்தவர்களுக்கு அண்மையில் எக்சிட்டர் நகரில் செய்தபிரசங்கத்தில் வண. றசல் அடிகளார் எடுத்து உரைத்தார்.

## கொழும்பு அதிமேற்றிராசன ஆலோசகக் குருமார் குழு நியமனம்

கொழும்பு அதிமேற்றிராசனத்தின் பரிபாலனத்தைக் கொண்டுநடாத்த தமக்கு ஆலோசனை கூறுவதற்கு சில குருமார் அடங்கிய ஒரு குழுனவிரை புதியமுறையில் தெரிந்தெடுக்க கருதினுல் கூறே அடிகளார் ஒழுங்கு செய்திருக்கின்ருர். அம்மேற்றிராசனத்துக்குச் சேர்ந்த குருமாரின் செனெட்சபை இக்குழுவினரைத் தெரிந்தெடுக்குமாறு கருதினுலவர்கள் அச்சபையைக் கேட்டிருக்கின்ருர். இத்தேர்தல், செனெட்சபையினரின் வாக்குச் சீட்டுமூலம் நடந்தேற இருக்கின்றது. இம்முறையினுல் ஆட்சி முறையில் குருமாரின் கூட்டுப் பொறுப்பை ஏற்படுத்துவதே கருதினுலடிகளின் நோக்கமாகும்.

## குருவானவரின் உதாரகுணம்

இங்கிலாந்தில் கென்ற் பகுதியில் புனித ஸ்நாபக அருளப்பர் கோவில் விசாரணைப்பகுதியில் வேலை செய்துவந்த வண. கஸ்ரெலி அடிகளார் அக்கோவிற்பங்கின் அபிவிருத்திக்கென ஒரு கோடி ரூபா பெறுமதியான பணத்தை தமது மரணசாதனத்தில் குறிப்பிட்டிருக்கின்ருர். அதே சாதனத்தில் தனது வேலைகாரருக்கும் ஒரு பெருந்தொகைப்பணத்தைச் சாட்டியிருப்பதுமன்றி தம்மிடமிருந்து கடனுகப்பணம் பெற்றுக்கொண்ட அப்பங்குமக்களின் அக்கடன்களையும் அழித்து விட்டார்.

## யூகோசிலாவியாவில் இருந்து நற்செய்தி

இவ்வருடம் யூகோசிலாவியா தேசத்தில் வழமையிலும் பார்க்கக்கூடிய தொகையினராய் கத்தோலிக்க குருமார் அபிஷேகம் செய்யப்பட்டிருக்கிருர்களென்றும் நற்செய்தி எட்டியிருக்கின்றது. அபிஷேகம் செய்யப்பட்ட 146 குருமாருள் 83பேர் எச்சபைகளைச் சேராதவராகவும் 63பேர் பல்வேறு சந்நியாசசபைகளைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கின்றனர். யூகோசிலாவியா தேசத்தில் 1967-ம் ஆண்டு அபிஷேகம் செய்யப்பட்ட குருமாரின் தொகை 139. அதற்கு முதல் வருடத்தில் 103

## கருதினுல் மின்சென்ரியிடம் செல்கிருர்

ஹங்கேரி தேசத்தின கருதினுல் மின்சென்ரி அடிகளார் அங்குள்ள அமெரிக்க தூதராலயத்தில் சரண்புகுந்து சுமார் 12வருடங்களுக்கு மேலாயிற்று. அவரை அங்கிருந்து பிறநாட்டுக்குக் கொண்டுசெல்லப் பேச்சு வார்த்தைகள் பலமுறைகளும் நடைபெற்றுப் பயனளிக்கவில்லை. இப்பேச்சு வார்த்தைகளில் முக்கிய பங்கு எடுத்து வந்த அவுஸ்திரியநாட்டுக் கருதினுல் கோனிக் அடிகளார் மீளவும் இந்த மாதக்கடைசியில் அவரைக்காண இருக்கிருர்.

## பீற்றர்பிள்ளை சுவாமியாரின் ஞாபகத்துக்கு மேலும் ஒரு வாசிகசாலை

இலங்கையின் சிறந்த கல்விமானுன வணக்கத்துக்குரிய பீற்றர்பிள்ளை சுவாமியார் மரணமாகி 5 வருடங்கள் முடிவுற்றன. அவரின் ஞாபகத்துக்கென பல இயக்கங்களும், ஸ்தாபனங்களும் இந்நாட்டில் பல இடங்களிலும் சேவை செய்கின்றன. அவரது மரணத்தின் 5-ம் வருட நிறைவின் ஞாபகமாக கொழும்புப் பிரிவில் ஜயலாபட்டினத்தில் சென்ற வாரம் ஒரு வாசிகசாலை திறக்கப் பட்டிருக்கின்றது கல்விக்காக தம்மை அர்ப்பணம செய்த இப் பெரியாரின் சேவைக்கு இந்நாட்டு மக்கள் என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள் என்பது உறுதி.

## இந்திய குருவானவருக்கு புனிதர் மகிமை அளிக்க முயற்சி

இந்தியாவிலே சந்நியாச குருமாரின் சுதேசசபைகளில் ஒன்ருகிய மலபார் கார்மலேட் குருமாரின்சபை ஸ்தாபகராகிய வண. சாவரு சுவாமியாருக்கு புனிதர்மகிமை திருச்சபையிடம் பெற்றுக்கொள்ள அப்பிரதேச மேற்றிராணியார் பெரு முயற்சி எடுத்துவருகின்ருர். இச்சபையில் இன்று சுமார் 600குருமார் இருக்கின்றனர்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G. C. E. (Ordinary Level)

# கிறிஸ்தவம்

க. பொ. த. பத்திரப் பரீட்சைக்குரியது (மார்கழி 1969)

— சிஸ். அன்ரனி யோசவ் —

## புனித லூக்காஸ் சுவிசேஷம்

வினா 9.

**சமாரித்தரைப்பற்றி நீர் அறிந்தவற்றைக் கூறி, நமது ஆண்டவர் அவர்கள்மட்டில் கொண்டிருந்த மனப்பான்மையை லூக்காஸ் சுவிசேஷத்திலிருந்து காட்டுக.**

யூதரும், பிறசாதியாரும் கலப்புற்றதினால் உருவாகிய ஒரு சாதியாரே சமாரியா ஆவர். அசீரியாவின் மன்னனான சல்மனசார், இஸ்ராயேலின் கடைசி மன்னனான ஓசி என்பவரைத் தோற்கடித்த பின்பு யூதரில் பெரும்பாலானோரைப் பபிலோனுக்குத் தேசாந்தரிகளாகக் கொண்டு சென்றான். ஒரு சிலர் அங்கும் இங்கும் ஒளித்திருந்து தேசாந்தர வாழ்வுக்குத் தப்பினர். எதிரிகள் நாட்டை விட்டுச் சென்றபின் இவர்கள் மீண்டும் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பிச் சென்றார்கள், ஒரு சிலர் மாத்திரம் இவ்விதமாகத் தப்பியதினால் இஸ்ராயேல் தேசத்தின் குடிசனம் குறையலாயிற்று. இவ்விதம் குடிசனம் குறைந்த இஸ்ராயேல் நாட்டை மீண்டும் மக்களினால் நிரப்புவதற்கு அசீரிய மன்னர்கள் யூபிறற்றீஸ் பள்ளத்தாக்கிலிருந்து மக்களைக் கொணர்ந்து இஸ்ராயேலில் குடியேற்றினர். "அசீரிய அரசனானவன், பபிலோன் கூத்தா, ஆவா... தேசங்களிலிருந்து மனுஷரை வரப்பண்ணி அவர்களை இஸ்ராயேல் மக்களுக்குப் பதிலாகச் சமேரியா பட்டணங்களிலே குடியேற்றினான்" (4 அர. 17/24).

குடியேறிய மக்கள் தமது பொய்த்தெய்வ வழிபாட்டை இஸ்ராயேலுக்குட் புகுத்தினர். இறைவனும் இவர்களின் விக்கிரக ஆராதனையைத் தண்டிக்கும் முகமாக நாடெங்கும் பொல்லாத மிருகங்களை நடமாடவிட்டார். இவ்விக்கிரக ஆராதனையாளர்கள் அசீரிய மன்னனிடம் தமக்கு மெய்யான தேவனின் குருப்பிரசாதி ஒருவனை அனுப்பும்படி வேண்டினர். பபிலோனில் தேசாந்தரியாக இருந்த ஒரு யூத குருப்பிரசாதி இவர்களிடம் அனுப்பப்பட்டார். அவருடைய போதனையைக் கேட்டு இவர்களும் யூத மதத்தைக் கடைப்பிடித்தனர். ஆனால், அதே நேரத்தில் அவர்கள் தமது விக்கிரக ஆராதனையைக் கைவிடவில்லை. மீதியாயிருந்த இஸ்ராயேல் மக்கள் குடியேறிய பிறசாதியாருடன் கலப்பு மணம் செய்தார்கள். ஜோசியாஸ் என்பவரின் காலத்தில் இச்சமாரித்தர் யூதபரம்பரையினராக அல்லது மனம் திருப்பப்பட்டவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். ஏனெனில் சமேரியாவிலுள்ள பொய்த்தெய்வ வழிபாட்டுத் தேவாலயங்களெல்லாம் தரைமட்டமாக்கப்பட்டுச் சமேரியர் எல்லோரும் பாஸ்காப் பண்டிகையைக் கொண்டாடுவதற்கு ஜெருசலேமுக்குச் செல்ல வேண்டுமென்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

காலஞ் செல்லச் செல்ல இச்சமேரியர் தங்கள் விக்கிரக ஆராதனையை மீண்டும் கடைப்பிடிக்கத் தொடங்கினர். பபிலோனிய தேசாந்தர வாழ்விலிருந்து திரும்பிய யூதர்களின் முதல குழுவினருக்கு எஸ்றால் என்பவர் தலைமை தாங்கினார். ஜெருசலேம் தேவாலயத்தை மீண்டும் கட்டி எழுப்புவதற்குச் சமாரியர் தங்கள் உதவியைக் கொடுக்க முன்வந்தபொழுது யூதர்கள் அவ்வுதவியை ஏற்க மறுத்தனர். இதனால் மனக்கசப்பு அடைந்த சமேரியர் அன்று தொட்டு யூதர்களின் சென்ம சத்துருக்கள் ஆனார்கள். சில வருடங்கள் சென்றபின் சமேரியரின் தலைவர்களில் ஒருவரான சனபலத் என்பவரின் மகளை ஒரு யூத குருப்பிரசாதி விவாகம் செய்தபோது, அவர் யூத மதத்திலிருந்தும், தேவாலயப்பணி செய்வதிலிருந்தும், தள்ளப்பட்டார். இக்குருப்பிரசாதி சமேரியருக்குத் தலைவராகி மோயீசனின் சட்டங்களை அவர்களுக்குக் கற்பித்துச் சமேரியாவிலுள்ள கரிசிம் மலைச்சாரலில் ஓர் தேவாலயத்தைக் கட்டுவித்தார். சமேரியர் இனிமேல் ஜெருசலேம் தேவாலயத்துக்குப் போகக்கூடாதென்றும், உத்தரவிட்டார். சமேரியர் வேதாகமத்தில் முதல் ஐந்து புத்தகங்களோடு ஜொசுவாவின் ஆகமத்தையும், நியாயாதிபதிகளின் ஆகமத்தையும் மாத்திரம ஏற்றனர். இவ்விதமாக யூதர்களுக்கும் சமேரியருக்குமிடையில் ஏற்பட்ட பிளவு மென்மேலும் அதிகரித்தது. பெரும் திருநாட்களை அறிவிக்கும் நோக்கமாக யூதர்கள் பந்தங்கள் கொளுத்துவது வழக்கம். சமாரியர் திருநாட்கள் அல்லாத நாட்களிலும் பந்தம் கொளுத்தி மக்களைத் தடுமாறச் செய்தனர்.

யூதர் யாத்திரை போகும் வேளையில் சமேரியாவுக்கூடாகப் போவதும், அவர்களுக்கு உணவும் தஞ்சமும் கொடுப்பதும் விலக்கப்பட்டிருந்தன. சமேரியர் செல்வந்தராய் இருந்ததோடு பெரும் செல்வாக்கும், அதிகாரமும் கொண்டிருந்தார்கள் சமேரியாவிலும், உரோமாபுரியிலும், கைரோவிலும், டமஸ்கசிலும் இவர்களுக்குச் செபக்கூடங்கள் இருந்தன.

லூக்கா சுவிசேஷத்தில் சமேரியரைப்பற்றி மூன்று தடவை கூறப்பட்டுள்ளது. (9/51, 10/30, 17/16). 9-ம் அதிகாரம் 51-ம் வசனத்தில் சமேரியர் கிறிஸ்துவைப் புறக்கணிக்கும் சம்பவம் கூறப்பட்டுள்ளது. பெரும்பாலும் கிறிஸ்து யூதனாயிருந்ததினால் அவர் மெசியாவென்று ஏற்க மறுத்தார்கள் போலும். யாகப்பரும், அருளப்பரும் கிறிஸ்துவைச் சமேரியர் ஏற்காததினால் சினம் கொண்டு சமேரியாமீது நெருப்பு மழை பொழிய வேண்டுமென்று கேட்டபொழுது கிறிஸ்து மாறுத்தாரமாக: "மனுமகன் ஆத்துமாக்களைச் சேதமாக்கவல்ல; அவைகளை இரட்சிக்கவே வந்தார்" என்றார்.

தன்னைச் சமாரியர் ஏற்காததினால் கிறிஸ்து கோபங்கொள்ளவில்லை. ஆனால், 3-ம் சுவிசேஷத்தில் வேறிருபாகங்களில் சமேரியரைப் புகழ்ந்து பேசுவதைக் காண்கிறோம. உ-ம்: நல்ல சமாரித்தன் உவமை, குஷ்டரோகிகளின் உவமை, பத்துக் குஷ்டரோகிகளைக் குணமாக்கியபின்பு நன்றி செலுத்தக் கிறிஸ்துவைத் தேடி வந்தவன் சமாரியன் ஒருவனே. "அவருடைய பாதங்களுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, அவருக்கு நன்றியறிந்த தோத்திரம் சொன்னான். அவன் சமாரித்தனாயிருந்தான் (17/16). பிறசிநேகத்தின் எடுத்துக்காட்டாகக் கிறிஸ்து ஒரு சமாரித்தனையே முன்மாதிரிகையாகக்கூறுகின்றார். நல்ல சமாரித்தன் உவமையில் ஆசாரியனும், லேவித்தனும் காயப்பட்டவனுக்கு உதவி புரியாதுபோக ஒரு சமாரியனே அவனுக்கு உதவிசெய்து பிறர் சிநேகத்தின் சின்னமாக விளங்குகிறான். இதிலிருந்து கிறிஸ்து சமாரியர்மீது (அவர்கள் தன்னை ஒரு யூதனென எதிர்த்தபோதிலும்)அன்பும், இரக்கமும், பிறர்சிநேகமும் உடையவராயிருந்தார் என்று அறிகின்றோம்.

# அவனின்றி அணுவும் அசையாது

உலக ஆரம்பம் தொடக்கம் மனிதன் மனத்திலே வினாவாக எழுந்துநின்ற விண்ணுலக யாத்திரையில் விடை கிடைத்துவிட்டது. வானில் பறந்து நிலாவில் நடந்து மீண்டும் வந்தான் மனிதன் உயிரும் உடலுமாக. உலக வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட அந்த நன்னாளை (ஆயிரத்துத்தொளாயிரத்தி அறுபத்தொன்பதாம் ஆண்டு ஆடி இருபத்தோராம் தேதி) மனிதனால் மறக்க முடியாத சம்பவம ஆட்கொண்டுவிட்டது. மனிதன் தனது ஆறாவது அறிவான பகுத்தறிவைக் கொண்டு நடத்திய விஞ்ஞானப் போராட்டம் பேரான வெற்றியை அளித்திருக்கின்றதுடன் எமக்கு நல்லதொரு பாடத்தினையும போதிக்கின்றது.

விண்வெளிவீரர்களான நீல் ஆம்ஸ்ட்ரோங், மைக்கேல் கொலின்ஸ், எட்வின் ஆல்டரின் ஆகிய மூவரும் கிறிஸ்துவை வழிபடுபவர்கள். இறைவன ஒருவன் இருக்கின்றான்; எம்மிலும் வல்லவன் ஒருவன் உள்ளான் எம்மைப் படைத்தவர். அவர் வல்லமையைக் கொண்டு மனிதன் தன் அறிவை நல்வழியில் வலியுடன் உபயோகித்தால் மனித முன்னேற்றத்துக்குச் சேவை செய்ய முடியும் என்பதனை உணர்த்தியிருக்கின்றனர். உலகமனைத்திற்கும் இச்சாதனை வெற்றியும் போதனையுமாகும்.

"அவனின்றி ஓர் அணுவும் அசைய முடியாது" என்ற அறிவுரையை மறந்து மனித சக்தி மூலம் இந்த உலகை என்ன, பூமண்டலத்தை என்ன, வான மண்டலத்தை என்ன, வெற்றி வாகை சூடுவோமென்ற கொள்கையில் தீவிரவாதம் செய்தோர் கண்டதெல்லாம் படுதோல்வியே தான். எல்லாம் வல்ல தேவனின் உதவியையும், வல்லவன் அளித்திருக்கின்ற அறிவையும நல்வழிப்படுத்தி, இன்று சந்திரமண்டலத்திற்கும் யாத்திரை செய்ய முடியும் என்ற முடிவுக்கு உலகம வந்துவிட்டது. இதனால் நாமும் எமது எந்த விடயத்திலும் எமக்கு வருகின்ற கஷ்டமான பாரமான மனத்தாங்கல்களிலும் சரி நாம் ஆரம்பிக்கப்போகும் எந்த நல்ல காரியங்களிலும் சரி இறைவன் உதவியை முதலில் இரந்துநின்று ஈடுபட்டால் நிச்சயம் நாம் அடைவது வெற்றியும் மகிழ்ச்சியுமே தான்.

எனவே இறைவன் ஒருவன் இருக்கின்றார். அவர் ஒருவர் மூலமே நமது வாழ்விலே வளம் காண முடியும், அமைதியடைய முடியும் என்ற நம்பிக்கை கொள்ளும் மனிதன் மலை அசைந்தாலும் மனம் அசையாத வலிமையுடையோன் ஆவான். அத்துடன் எமது மூன்று எதிரிகளான உலகம், சரீரம், பசாசு என்ற நாசகார சக்திகளையும் இதனால் இலகுவில் வென்றுவிடலாம் என்பதும் தெளிவாகின்றது.

— காமல் இக்னேஷியஸ்



"எனக்கு அறிமுகமானவர்கள், என்னை அன்போடு நேசித்தவர்கள் அனவரதம் செபங்கள் இத்தருணம் எனக்குத் தேவை."

— புனித எப்ரேம்

## நினைவு கூருவோம்

**சிமியோன் பிலிப் (சம்மாட்டியார்)**

அவர்கள் மறைவின்

## 2ஆம் வருட நினைவு

தோற்றம் : 28—2—30 மறைவு : 26—9—67

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"

இவ்வுலகை விட்டுப் பிரிந்தும், எங்கள் மனதில் நின்றும் நீங்காத சிமியோன் பிலிப் அவர்கள் மறைந்த 2-வது ஆண்டு இம்மாதம் 26-9-69இல் நிறைவுறுவதால் அன்று காலை 5-30 மணிக்கு புனித யாகப்பர் தேவாலயத்தில் துக்கப்பாடற்பூசை நடைபெறும். இதனைக் கண்ணுறும் இனசனர், அனுதாபிகள் அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாய்க் கேட்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், பெற்றோர், சகோதர சகோதரிகள்,

றெக்கிளமேசன்,
குருநகர், யாழ்ப்பாணம். 113/69.

* * *

**திரு. அந்தோனி இம்மனுவேல் பெர்னான்டோவின்,**

## 4-ம் வருட மரணஞாபகம்

பிறப்பு : 29—11—1902. இறப்பு : 1—10—1965.

வாழ்வில் நேசித்த உம்மை மரணத்தில் மறவோம். மறைவில் அவரை என்றும் நினைவு கூருகின்றோம். எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து எல்லோருக்கும் இனியவராக வாழ்ந்து, எம்மை விட்டுப்பிரிந்தாலும் எம் உள்ளத்தினின்றும் பிரியாத எனது நேசப்பத்தாவாகிய திரு. அந்தோனி இம்மனுவேல் பெர்னான்டோவின் 4-ம் வருட நினைவு வருகிற 1-10-69ஆம் நாள் என்பதை துயரத்துடன் நினைப்பூட்டுகின்றோம். அன்று அன்னாரின் ஆத்தும சாந்திக்காக மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்தில்காலை 6 மணிக்கு ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

அவ்வேளையில் அவரது இனசனரும், அன்பர்களும் பங்குபற்றி அவருக்காக மன்றாடுவதுமன்றி இதைக் கண்ணுறும் யாவரும் அவரின் ஆத்தும சாந்திக்காக மன்றாடும்படி வேண்டுகின்றோம்.

நித்திய பிதாவே, இவருக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும்.

பிரிவால் துயருறும் நேசமனைவி: திருமதி. மேரி மார்த்தம்மாள் பெர்னான்டோ பிள்ளைகள்: இமாக்குலேற் அனற்று பெர்னான்டோ, பமேலா பேப்பற்றுவா பெர்னான்டோ.

சின்னக்கடை,
மன்னார். 112/69.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் பேனா





### காந்தி நூற்றுண்டு :

மகாத்மா காந்தியின் நூற்றுண்டு விழாக்கொண்டாட்டங்களின் உச்சிக்கட்டம் எதிரே வரும் 2-ந்தேதியாகும், கிறிஸ்துநாதரின் போதனைகள் பலவற்றைச் சாதனையில் காட்டியவர் மகாத்மா. அச்சாதனைகள் சிலவற்றைப் பேசும்பேனு சுருக்கமாக ஆராய்கிறது.

### எதிரியை நேசி :

கிறிஸ்துவின் போதனைகளுள் தலையாயது இது. சாதாரணமாக மக்கள் அனுசரிக்க விரும்பாதது இக்கட்டளை. பகைவனுக்கு அன்புசெய்வதா? கூடவே கூடாது. தருந்தபாடம் கற்பிக்க வேண்டுமென்றே விரும்புபவர் பலர். மகாத்மா சிறையிலிருந்தபோது ஒரு நிகழ்ச்சி. காவலிலிருந்த காவலனிடம் குடிக்கத் தண்ணீர் கேட்டார். காவலனுக்கு இது பிடிக்கவில்லை. எட்டிக் காலால் உதைந்துவிட்டான். மகாத்மாவின் முகத்தில் பட்டது உதை. முன்வாய்ப்பற்கள் இரண்டு உடைந்து விழுந்தன. கூடவிருந்த கைதிகள் ஆத்திரங்கொண்டெழுந்தனர். அவர்களை யமர்த்தினார் காந்தி. காவலனின் காலைப்பிடித்துக்கொண்டார். ஒடிந்த எனதுபல் குத்தியிருக்குமோவெனத் தடவினார். கல்நெஞ்சங்கொண்ட காவலன் இச்செய்கையால் மனம்உருகி மன்னிப்பும் கேட்டான்.

### அயலவனுக்கு அன்புகாட்டு :

ஆசிரமத்துக்குவரும் விருந்தினர்எல்லோரையும் தன்புதல்வர்கள் போலவேகருதி அன்புகாட்டுவார். அவர்களது தேவைகளைத் தாமே கவனிப்பார். அவர்களது மலசல அழுக்குகளைக்கொண்ட பாத்திரங்களையும் தாமும் தமது மனைவிமக்களுமே சுத்தஞ்செய்வர். மகாத்மா இந்த உயரிய பண்பாட்டினால் மட்டுமே லட்சக்கணக்கான ஏழை இந்தியர்களின் மனதில் நீங்காமல் அரசோச்ச முடிந்தது.

### முதல்வனும் பணிவிடையும் :

நீ தலைவனுயிருக்க விரும்பினால் முதலில் பணிவிடைகளைச் செய்யக் கற்றுக்கொள் என்கிறார் கிறிஸ்து. இந்திய தேசிய காங்கிரசின் வருடாந்த பொதுக்கூட்டம். தலைமைவகிப்பதற்காக மகாத்மா வந்துசேர்ந்தார். எங்குபார்த்தாலும் அசுத்தக்குப்பை. பெரிய தலைவர்களோ அவற்றைக் கவனியாமல் பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளில் கருத்தூன்றியிருந்தனர். மகாத்மாகாந்தி ஒரு விளக்குமாற்றை எடுத்துக்கொண்டார். ஒரு புறமாகத் துப்புரவு செய்யத் தொடங்கினர். தேசபிதா தொட்டதனால் விளக்குமாற்றுக்கே தனிமதிப்பு. எல்லாத் தலைவர்களும் ஆளுக்கொரு விளக்குமாற்றைத் தூக்கிக்கொண்டு சுத்தஞ்செய்தனர். நொடிப்பொழுதில் அவ்விடம் தூய்மையாகியது.

### மலைப்பிரசங்கம் :

கிறிஸ்துநாதர் மலைமேற்செய்தருளிய எட்டுப்பாக்கியங்களே நற்செய்திஏடுகளில் மகாத்மாவைக் கவர்ந்த போதனைகளாகும். தமதுபிரார்த்தனைக் கூட்டங்களில் எல்லாம் இப்பிரசங்கத்தை வாசித்துத் தியானம் செய்துவந்தார்.

### குடும்பக்கட்டுப்பாடு :

அண்மையில் திருத்தந்தை சின்னப்பர்குடும்பக்கட்டுப்பாடு பற்றி நிருபமவிடுத்தபோது இக்காலத்துக்கு ஒவ்வாதது எனப்பலர் எள்ளிநகையாடினர். குடும்பக் கட்டுப்பாடுபற்றி கத்தோலிக்க திருச்சபைகூறுவதே மகாத்மாகாந்தியினுடைய கொள்கைகளும் ஆகும். குடும்பக் கட்டுப்பாடுவேண்டும். அது மனக்கட்டுப்பாடாகவேயிருத்தலவேண்டும். மாத்திரைகளும் மற்றும் நவீனசாதனங்களும் தேகஇச்சைக்கு உதவுவனவாகவே அமையும். ஆன்மீக வளர்ச்சிக்கு அவை விரோதமானவை. கணவனும் மனைவியும்மனக்கட்டுப்பாடுடன் சகோதரர்களாக வாழ்க்கை நடாத்துவதே சிறந்த முறையெனக் கூறிய மகாத்மா தன்வாழ்க்கையிலும் அவ்விதமே நடந்து காட்டினர்.

### அயலவரின் தவறு :

மற்றையோரின் தவறுகள் பற்றி நாம் பேசுவதற்குமுன்னால் எமது பிழைகள்பற்றிச் சிந்திக்கவேண்டும் என்பதைக் கிறிஸ்து பலதடவைகள் வற்புறுத்தியிருப்பதை நற்செய்தி ஏடுகள் எடுத்துக்காட்டுகின்றன. மகாத்மா இப்போதனையை மிகவும் கடைப்பிடித்தார். தனது குற்றங்களை அவர் அடிக்கடி ஆராய்ந்தார். தனது தவறுகளைப் பகிரங்கமாகக் கூறினர். அவற்றுக்காகத் தாமே பிராயச்சித்தம் செய்துகொண்டார். தமது புதல்வனொருவன் தீயவழியில்சென்று தமக்கு அவமானம் வருவித்ததையறிந்தபோது கவலையுடன் கூறுவார்: யான் சிறியவயதில் செய்த தவறுகட்குத் தண்டனையாகவே இறைவன் இவ்விதம் செய்கின்றார்.

### மூன்று போதனைகள் :

மகாத்மாவின் எழுத்துப் பீடத்தில் மூன்று குரங்குப் பொம்மைகள் இருக்கும். ஒன்று கண்களைப் பொத்திக் கொண்டிருக்கும். இன்னொன்று காதுகளைப் பொத்திக் கொண்டிருக்கும். மற்றது வாயைப் பொத்திக்கொண்டிருக்கும். தீயனவற்றைப் பாராதே, பேசாதே, கேளாதே என்பது தான் அக்குரங்குகள் போதிக்கும் பாடங்கள். இப்பாடங்களை நாமும் சிரமேற்கொண்டால் எங்கள் வாழ்க்கைப் பாதை அறநெறிப் பாதையாக விளங்குமல்லவா?

### ஐப்பசிமாதம் :

அடுத்தமாதம் ஜெபமாலை யன்னையின் மாதம். பரிசுத்த அன்னையால் பரலோகத்திலிருந்து பூலோகத்துக்கு அளிக்கப்பட்ட முத்தாரமதான் ஜெபமாலை. பாத்திமாவிலும், லூர்துபதியிலும் ஜெபமாலையைக் காத்தேந்திய குழந்தைகட்கு ஜெபமாலையுடன் காட்சிதந்து அம்மணிமாலையைச் செபிப்பதன் அவசியத்தை விளக்கினார் மரியன்னை. ஜெபமாலையுடன் அவர்கொண்டிருக்கும் தொடர்பினால் ஜெபமாலை இராக்கினியெனவும் கௌரவம் பெற்றார். இம்மாதத்தில் நாம் தனித்தோ அன்றி குடும்ப சமேதராகவோ அல்லது பொதுத் தலங்களில் பலர்கூடியோ ஜெபமாலையைச் செபிப்பது மிகவும் பயனுள்ளது. பாவிகள் மனந்திரும்புவதற்காக, திருச்சபையின் ஒற்றுமைக்காக, திருச்சபையின் எதிரிகளால் இன்னல்படும் கத்தோலிக்கர்கட்கு ஆறுதலளிக்க, திருத்தந்தையின் கருத்துகட்காக நாம் தினசரி செபமாலையை ஓதி ஒப்புக்கொடுப்போம்.

### மணமகனின் உறவினர்கள் :

அமெரிக்காவில் ஒரு கார்மேல் கன்னியர்மடத்தில் சில கன்னியர்களை மடத்தில் சேர்த்துக்கொள்ளும் வைபவமொன்று இடம்பெற்றது. நவகன்னியர்கள் மணமகள்போல அலங்கரிதுக்கொண்டு பீடத்தண்டை சென்றனர். இவ்வைபவத்தை நோக்கிக்கொண்டிருந்தவர்களுள் யூதகுருமாரும் இருவர். திருச்சடங்குகளை நடாத்துவதற்கு வந்திருந்த மேற்றிராணியார் யூதகுருக்களைக் கண்டதும் அவர்களை வரவேற்று, சடங்கின் நோக்கத்தை விளக்கும்படி இவர்கள் யேசுவின் மணமகள்கள். உங்களையாரென்று தெரிந்துகொள்ளலாமா? என அன்போடு வினவினர். யூதகுருவரொருவர் மரியாதையாக எழுந்துநின்று கூறினர், பெருந்தகையே நாங்கள் மணமகனுன யேசுவின் உறவினர்கள்.

### மினிஸ்கேட் யுத்தம் :

மினிஸ்கேட் எனப்படும் கட்டைப்பாவாடை நோய் வெகுவேகமாகவும் மோசமாகவும் பரவிக்கொண்டே செல்வதை யாவருமறிவர். இந்நிலையில் திருச்சபைத் தலைமைப்பீடமான வத்திக்கான் காவலர்கள் கட்டைப்பாவாடைமீது போர் தொடுத்திருப்பதை அண்மையில் பத்திரிகைகள் பிரமாதப் படுத்தியிருந்தன. இராயப்பர் போராலயத்துக்கு அலங்கோலமான ஆடையணிகளுடன் சென்ற பலபெண்கள் காவலர்களால் வெகுபண்போடு திருப்பியனுப்பப்பட்டனர். வத்திக்கானின் இந்த நடவடிக்கையை ஆதரித்து வேறுசில இஸ்லாமிய நாடுகள் தங்கள் தேசங்களில் கட்டைப் பாவாடைக்கு முற்றாகத் தடைவிதிக்கவும் தீர்மானித்துள்ளனர். நம நாட்டிலோ?

# உருளும்  உலகிலே

● குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்குக் கைவிரல் ரேகைகள் பயன்படுவதுபோல், ஒரு காலத்தில் கை ரேகைகளும் பாதப் படிவுகளும் மருத்துவ பரிசோதனைக்குப் பயன்படலாம் என்று ஜேர்மன் டாக்டர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். குழந்தைகள் சம்பந்தப்பட்ட எல்லா நோய்களையும் குணப்படுத்த கைரேகைஆராய்ச்சி துணைபுரிந்திருக்கிறது. கைரேகையில் தோன்றிய மாற்றத்தைக்கொண்டு ஒரு நோயாளியின் நிணநீர் சுரப்பியின் செயல்முறையில்ஏற்பட்டிருந்த மாற்றத்தை உணர முடிந்தது என்று மருத்துவர்கள் கூறியிருக்கிறார்கள்.

● நின்ற நிலையில் நேராக மேலே புறப்பட்டுச் சென்று பிறகு ஆகாயத்தில் பறக்கவும், வானிலிருந்து நேராகக் கீழே இறங்கவும் கூடிய விமானம் இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இது தற்போது விமானப் படைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. இன்னும் சில ஆண்டுகளில் பயணிகள் செல்லுவதற்கும் இத்தகைய விமானங்கள் தயாராகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

● இலங்கையில் உள்ள கண் தான சங்கத்தில் ஏறக்குறைய 2,85,000 பேர் தங்கள் கண்களை நன்கொடையாக வழங்குவதாக எழுதி வைத்திருக்கிறார்கள். சென்னை எழும்பூர் கண் மருத்துவமனைக்கு இலங்கைக் கண் தான சங்கத்திலிருந்து 30-8-69 இல் இரு விழிகள் அனுப்பப்பட்டன. 48 மணி நேரத்திற்குக் கெடாதபடி பாதுகாப்பாக இவைகள் பெட்டிகளில் அனுப்பப்படுகின்றன. இரு நோயாளிகளுக்கு இக்கண்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

● காரோட்டிகளும், பயணிகளும் இடிவிழுந்துவிடுமோ என்று இனிக் கலங்க வேண்டியதில்லை. இடியைத் தாங்கிக்கொள்ளும் ஆற்றல்வாய்ந்த புதுமையான கருவி ஒன்றை மேற்கு பேர்லின் நகரிலுள்ள சீமன்ஸ் நிறுவனம் கண்டுபிடித்திருக்கிறது. இதனைக் காரில் பொருத்திக்கொண்டால் கார் இடியின் தாக்குதலுக்கு ஆளாகாமல் தப்பித்துக் கொள்ளலாம்.

● மகாத்மா காந்தியின் நூற்றுண்டு விழாவையொட்டிக் கைதிகளுக்குத் தண்டனைக் குறைப்பு அளிக்கவேண்டுமெனப் பெரும்பான்மையான மாநிலங்கள் தீர்மானித்துள்ளன. தமிழ்நாட்டில் 111 கைதிகளுக்கு மரணதண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

● காந்திஜி நூற்றுண்டு விழாவுக்கு ரயில்வே சலுகைகள் மகாத்மா பிறந்த இடமான போரிப் பந்தருக்குச் சென்றுவர, ரயில்வே கட்டணச் சலுகைகள் செய்து தரப்படுகின்றன. பல்கலைக்கழகங்களைச் சார்ந்த பேராசிரியர்கள் கருத்தரங்குகளிற் பங்குபெறவும், மகாத்மா பற்றிய உரை நிகழ்த்தவும் செல்வதற்காக ரயில்வேக்கள் கட்டணச் சலுகைகள் செய்திருக்கின்றன. காந்திஜி உருவம் பொறிக்கப்பட்ட பயணச் சீட்டுக்களை ரயில்வேக்கள் தயாரிக்க இருக்கின்றன.

● பல ஆண்டுகளுக்கு முன்பே, பெங்களூர் கன்டோன் மென்டில் உள்ள ஒரு வீதி ஆர்ம்ஸ்டிராங் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றது. பெங்களூர் லால்பாக் பூங்காவிலுள்ள மூன்று வகையான செடிகளுக்கும், ஆர்ம்ஸ்டிராங், ஆல்ட்ரின், காலின்ஸ் என்ற பெயரிட்டு விண்வெளி வீரர்களைச் சிறப்பித்திருக்கிறார்கள்.

● அப்போலோ—11 விண்வெளி வீரர்கள் கொண்டுவந்த 7·5 அங்குல நீளமும், 2·5 அங்குல அகலமுமுள்ள கல் வெப்பத்தால் உருவானது என்று முதல் சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

● 1955-ம் ஆண்டிற்கு முன் மூளைமந்தநோய் தீர்க்கப்பட முடியாதது என்று கருதி வந்தனர். ஆனால், 5 ஆண்டுகளாகச் செய்துவந்த ஆராய்ச்சியின் பலனால் இது தீர்க்கப்படக்கூடியநோய் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. உடலில் ஊறும் பலவகைத் திரவங்கள் ஒன்றுசேர்ந்து உடல் வளர்ச்சிப் பொருள்களில் ஏற்படுத்தும் மாறுதல்தான் இந்த மூளைச்சோகையை ஏற்படுத்துகிறது என்று டாக்டர் ஜோனன் மாத்னர் என்பவர் கூறுகின்றார். சர்க்கரைச் சத்து, கொழுப்புச் சத்து, மைதா ரொட்டி, பல்வேறு காய்கறிகள்முதலியன மூளைச்சோகையைத் தீர்க்கும உணவாகும். ஆனால், கறி, மீன், சாதாரண ரொட்டி, புரதச்சத்து மிகுந்த காய்கறிகளை விலக்கவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

● ஜேர்மன் ஆராய்ச்சிக் கப்பல் ஒன்று சமீபத்தில் பல கடல் பூனைகளைக் கொண்டுவந்திருக்கிறது. அவைகள் யானைமுகம், சப்பைமுகம் என்ற பலவகையாகக் காணப்படுகின்றன. இவைகளைக் கொண்டு 30 கோடி ஆண்டுகளுக்குமுன்னால் கிம்ரா கடலில் கடற்பூனைகள் வாழ்ந்துவந்திருக்கின்றன என்றுகண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகளிர் மன்றம்

அன்புநிறை நேயர்களே! வணக்கம்!........

இறைவன் நம்மை நேசிக்கின்றார். வார்த்தைகளிலே இதனை நாம் நாளாந்தம் சொல்லி வருகின்றோம். ஆனால் இறைய்ன்பின் உண்மையினை நாம் எவ்வளவு தூரம் உய்த்துணருகின்றோம் என்பது கேள்விக்கிடமாகின்றது. சிறிது ஆராய்வோமா?...

**இறைவன் நம்மை நேசிக்கின்றார்!**

நாம் ஒருவரை நேசித்தால் அவர்களுக்கு எல்லாவற்றையுமே கொடுப்போமல்லவா? இறைவன் அழகான உலகைப் படைத்து, அதிலுள்ள எல்லா இன்பங்களையும் நாம் அனுபவிக்கத் தந்துள்ளாரே?...

**இறைவன் நம்மை நேசிக்கின்றார்!**

நாம் ஒருவரை நேசித்தால் அவர்களுடன் சம்பாஷித்து, எம் அன்பைத் தெரிவிக்க விரும்புவோமல்லவா?... இறைவன் தீர்க்கதரிசிகள், பிதாப்பிதாக்கள் மூலமாகவும், சுவிசேஷ மூலமாகவும் இன்று திருச்சபையின் போதகர்கள் மூலமாகவும் எம்முடன் சம்பாஷித்துத் தமது அன்பைத் தெரிவித்துக்கொண்டேயிருக்கின்றாரே!...

**இறைவன் நம்மை நேசிக்கின்றார்!**

நாம் ஒருவரை நேசித்தால் அவர்களைப் போலவே இருக்கத் தெண்டிப்போமல்லவா?... இறைவன் எம்மை அளவு கடந்தவிதமாக நேசித்ததால் தமது தேவமகத்துவத்தையே துறந்துவிட்டு எம்மைப்போலாகும்படி மனித அவதாரமெடுத்தாரே?...

**இறைவன் நம்மை நேசிக்கின்றார்!**

நாம் ஒருவரை நேசித்தால் எப்போதும அவர்களுடனே இருக்க விரும்புவோமல்லவா?... இறைவன் எம்முடனே இருக்க வேண்டுமென அத்தனைதூரம் விரும்பியதால் தேவநற்கருணையில் என்றும் நம் மத்தியிலே வாசஞ்செய்கின்றாரே!...

**இறைவன் நம்மை நேசிக்கின்றார்!**

நாம் ஒருவரை நேசித்தால் அவர்களுக்காக எதையுமே தியாகஞ் செய்வோமல்லவா? இறைவன் எம்மை நரகவாசலிலிருந்து மீட்டுவிட வேண்டுமென்று ஆசித்ததால் தமது சொந்த உயிரையே சிலுவைமரத்தில் எமக்காகப் பலியாக்கினாரே!...

**இறைவன் நம்மை நேசிக்கின்றார்!...**

நாம் ஒருவரை நேசித்தால் அவர்கள் எப்பொழுதுமே இன்பமாகவும், மகிழ்ச்சியுடனும் வாழவேண்டுமென்று விரும்புவோமல்லவா? இறைவன் எம்மை நித்தியத்துக்கும் இன்பமாக வாழ்விக்க விரும்பி அழகான மோட்சத்தைப் படைத்து, எம்மை அங்கு வரும்படி அழைக்கின்றாரே!...

இறைவனின் உன்னத நேசத்தையிட்டு இந்நாட்களில் தியானிப்போம். நம்மில் அன்பு செலுத்திய அன்னையர் தந்தையர் மறைந்து விடலாம். சோதர சோதரிகள் நம்மைக் கைநெகிழ்ந்து புறக்கணிக்கலாம். சிநேகிதர், உறவினர், பாசத்தை மறந்து நம்மை ஒதுக்கிவிடலாம். நாம் அன்பு செலுத்தி உதவி செய்தவர்கள் நம்மில் பகைவர்மம் பாராட்டலாம். ஆனால் என்றும், எச்சந்தர்ப்பத்திலும், நம்மை நேசிக்க ஒருவர் உண்டே!... அந்த உன்னதரின் நேசத்திற்குப் பிரதியன்பு செலுத்த எம உயிர் உள்ளளவும் முயற்சிப்போமாக.

— ரோஜா

# பாலகர் வாயிலிருந்து!....

மங்களத்துக்குச் சுமார் ஐம்பத்தைந்து வயதிருக்கலாம். அன்று ஓய்வுநேரப்பொழுதில் இறைவன் ஆலயஞ் சென்றாள். அவளால் எதையுமே செபிக்க முடியவில்லை. அத்தனை துயரங்கள் அவள் மனதில். வீட்டின் வறுமைநிலை ஒருபுறம். வயது வந்த ஆண்மக்களின் அடங்காத்தனம் மறுபுறம். கலியாணத்துக்குக் காத்திருந்த மூன்று பெண்களின சீதனத்தைப்பற்றிய பிரச்சினை இன்னோர் புறம். அண்டை அயலாரோடு அன்றாடம் ஏற்படும் சிறுசிறு சண்டை சச்சரவுகள் பிறிதொருபுறம். உணவுப் பொருட்களின் விலையேற்றத்தில் நாளையைப்பற்றிய அங்கலாய்ப்பு மற்றோர் புறம். இறைவனிடம் சொல்லி வேண்டுதல் புரியலாமென்றால் நிம்மதியாக ஒரு ஜெபத்தைச் செபிக்கவும் முடியாமல் திண்டாடினாள். தனது அவலநிலையை நினைந்துகொண்டே ஒரு தூணில் சாய்ந்தபடி இருந்தாள் தேவாலயத்தில்.

சில நிமிஷங்கள் கழிந்தன. வாசற்புறத்தில் மழலைமொழிகள். "வா!... ரவி!... உள்ளே போவோம்!..." என்றது ஒரு குரல். உள்ளே போய் என்ன தான் செய்வதாம். செபம் ஒண்ணுமே தெரியாதே!... என்றது அடுத்த பிஞ்சுக் குரல். தெரிஞ்சதைச் சொல்லுவோம் வா!... குரலைத் தொடர்ந்து இரு மழலைச்சிறார் அடிமேலடிவைத்து நடந்து மண்டியிட்டனர் சற்பிரசாதப் பேழையின்முன். "பிதாச்சுதன போடலையே நீ!..." ராஜனின் இடதுகையைப் பிடித்துச் சிலுவையடையாளம் போடத் தானுமாறாய்க் காட்டிக் கொடுத்தாள் ரவி. "நீ கையைக் கும்பிடாமலிருந்திருயே" ரவியில் குறைபிடித்தான ராஜன். "சரி செபம் சொல்லுவோமே!" "சின்ன யேசுவே உமக்கு ஆய்!... இன்று நாங்கள் குளப்படி செய்யவில்லை. அதனாலே உமக்கு எங்களோடே 'டு' இல்லைத்தானே" என்றான் ரவி "இப்படியா சொல்வது!... பரமண்டலம் சொல்லுவோமே!..." என்று தொடங்கிய ராஜன், "பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே!.... என்று செபத்தைத் தொடங்கினான். சுமார் பத்துத்தடவை அதையே திரும்பத் திரும்பச் சொன்னார்கள். குழந்தைகளின் உருக்கமான பிதாவே என்ற அழைத்தல் மங்களத்தின் மனதை ஊடுருவியது. "நமக்குப் பிதா ஒருவர் பரலோகத்தில் இருக்கிறாரே. எனக்கேன் இந்த அங்கலாய்ப்புக்கள்?" என்று யோசித்தாள் ஒரு கணம். மிகுதிச்செபம்தெரியவில்லை சிறாருக்கு. "ஆ!.... எனக்குக் கொஞ்சம் தெரியுமே" என்ற ரவி, "எங்கள் அன்றாட அப்பத்தைத் தாரும்"... எங்களோடு "டு" போடுகிறவர்களுக்கு "ஆய்" கொடுக்கச் செய்யும். எங்களைச் சோதனை பாஸ் பண்ணப் பண்ணும் ஆமேன்சேசு." செபம் முடிந்தது. இருசிறாரும் கைகளைக் கோர்த்தவண்ணம் வெளியேறினர்.

மங்களம் அந்த மழலைமொழிகளின் கனிவில் அழுந்தினாள். அன்றாட உணவை இறைவன் தருவாரே. வானத்துப் பறவைகளைக் காக்கும் தேவன் நம்மைக் காக்கமாட்டாரா? என்று எண்ணினாள். அயலவரோடு அடிக்கடி சண்டை போடக்கூடாது. அவர்களை நேசிக்க வேண்டும் என்று திட்டமிட்டாள். பசாசு தெரிவிக்கும் அவநம்பிக்கை யென்னும் சோதனையில் சித்தியெய்த இறைவனிடம் வரங்கேட்டாள். பரமண்டலமந்திரம் முழுவதையும் பயபக்தியாய் ஓதினாள். நிம்மதியுடனே வீடு நோக்கினாள் மங்களம்.

# பிரிந்தவர் கூடினுல்!...

"குயின் மேரி" என்ற நாமதேயங்கொண்ட அந்த அழகான கப்பல் தனது நீண்ட பிரயாணத்தின் பின் ஆடி அசைந்துவந்து அடைந்தது கரையை. மூன்று வருடங்களின் பின் தன் தாய்நாட்டு மண்ணில் காலடி எடுத்து வைத்தபோது பாஸ்கரின் மனம் ஒரு கணம் மகிழ்ச்சியில் துள்ளியது,...ஆயின் அடுத்த கணம் அவள் நினைவு!....ஆம் அவன் இதய அன்பைக் கவர்ந்திருந்த அந்த உத்தமியின் நினைவு!... இறையன்பொன்றையே உலகில் பெரிதெனஎண்ணி தன் அன்பைத்தியாகம் செய்தவளின நினைவு ஏற்பட்டதும் அவன மனம் துயரக் கடலில் மூழ்கியது. ஆம்!... ஹெலன் எப்படியிருப்பாளோ?...தனக்காக இப்போதும் காத்திருப்பாளோ?... அன்றேல்!...அன்றேல்!... உத்தமன் ஒருவனின் மனையாளாகி!...அவனால் அந்த நினைவை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. "இறைவா!... நான் உன்னைச் சிலகாலம் மறந்துநடந்த துரோகத்துக்காக என் ஹெலனை என்னிடமிருந்துபறித்துவிடாதே" என அவன் இதயக்குரல் வேண்டுதலிட்டது.

வாகனமொன்றிலேறி தன் இல்லம் அடைந்தான் பாஸ்கர். தந்தையார் அவன் வருகையில் அளவிலா இறும்பூதெய்தினார். உறவினர் குதூகலித்தனர். நண்பர்கள் வாழ்த்தினர், ஆபீஸ் உடன் அலுவலாளர் அவன் பயிற்சி முடித்து மனேஜர் பதவியுடன் வந்தமை குறித்து அவனைப் பாராட்டினர், ஆயின் பாஸ்கர் உள்ளமோ எதிலும் ஈடுபடவில்லை. ஆம்! ......ஹெலன் அவனைப் பாராட்டவரவில்லை. அது அவன் உள்ளத்தை வாட்டிக் கருக்கியது...தன் வருகையில் குதூகலிக்க வந்தவர்களை உபசரித்து அனுப்பிவிட்டு சோபாவில் சாய்ந்தான். அவன் சிந்தனைப் பறவை முந்திய நாட்களூடே சிறகடித்துப் பறந்தது.

* * *

அந்த நாட்களில்....பாஸ்கர் அந்தக் காரியாலயத்திலே ஹெட்கிளாக். ஹெலன் அவன் காரியதரிசியாக கடமையாற்றினாள், தாய்தந்தையற்ற அனாதை அவள். வாழ்க்கையில் இன்பத்தை எள்ளளவும் சுவை பார்த்தவளல்ல. தனக்குப் பாதுகாப்பாகத் தன்னுடன் இருக்கும் அத்தையினதும் தனதும் வாழ்க்கைப் பாதையை ஓட்ட அப்பதவியில் சேர்ந்திருந்தாள். ஏழை தான். ஆயின அவள் ஆடம்பரமற்ற உடையும், எளிமையிலும் சுடர்விடும் அழகும், அவள் கன்னங்களில் குவியும் புன்னகைச் சிரிப்பும் யாரையும் கவர்ந்திழுக்கும் சக்தி வாய்ந்தனவே. அவள் எளிமை, பணச்செருக்கில் மிதந்த பாஸ்கரையே கவர்ந்தது. எள்ளளவும் கபடற்ற உள்ளத்துடன் நடந்துவந்த ஹெலனிடம் தன் அன்பைக் கூற முடியாமல் திண்டாடினான பாஸ்கர். ஹெலனுக்கும் பாஸ்கரின் மோகன உருவத்தில ஒரு கவர்ச்சி ஏற்பட்டேயிருந்தது இருப்பினும் முடவன் கொம்புத தேனுக்கு ஆசைப்படக்கூடாது என்று ஒதுங்கியேயிருந்தாள் அவள். ஒருநாள் பாஸ்கர் தன் உள்ளக் காதலை நேர்மையுடன் வெளியிட்டபோது அவள் பூரித்தே போனாள். மலர்க்கொடிக்கு அசைந்தாடக் கொம்பு கிடைத்தால் அது பூத்துக் குலுங்கத்தானே செய்யும். அவள் காதலை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டாள். இறைவன் தந்த துணையாகவே கருதினாள். அத்தையுடன் கலந்துகொண்டு திருமண வைபவத்தை நடாத்த முடிவு செய்தனர்.

குறிப்பிட்ட நாளொன்றில் பாஸ்கர் ஹெலனுடன் அவள் அத்தையைக் காணச்சென்றுகொண்டிருந்தாள். அப்போது தான் மின்னாமல் முழங்காமல் இடிவிழுந்தது ஹெலன் உள்ளத்தில். ஆம்!...தேவாலயம் ஒன்றை அவர்கள் கடந்து செல்லவேண்டியிருந்தது. "பாஸ்கர்!...நற்கருணை சந்தித்துவிட்டு வருவோமே! ...என்றாள் ஹெலன். திகைத்துப்போய் நின்றான் பாஸ்கர். "வேண்டாம் ஹெலன்!...... என்னைக் கூப்பிடாதே. இந்தப் பக்திக் கிருத்தியங்களிலெல்லாம் எனக்கு சிறிதும் பிடிப்பேயில்லை" என்றான் கண்டிப்பாக. ஹெலன் திரும்பவும் திரும்பவும் கேட்டாள். "ஹெலன்!...நான் ஒருகாலத்தில் கத்தோலிக்கனாயிருந்தவனே. ஆயின் கடந்த 8ஆண்டுகளாக நான் தேவாலயமொன்றில் நுழைந்ததேயில்லை. இறைவனில் எனக்கு நம்பிக்கையேயில்லை. இந்தப் பக்திக் கிருத்தியங்களில் ஈடுபடுபவர்களையும் எனக்குப் பிடிப்பதேயில்லை" என்று கூறினான் முடிவாக. ஹெலன் அவன போக்கைப் புரிந்துகொண்டாள். அவனது கொள்கைகளை மாற்றமுடியாது என்பது அவள் அனுபவத்தில் அறிந்ததே. எனவே, "பாஸ்கர்!...நீங்கள் ஓர் உத்தம கத்தோலிக்கனாயிராதவரை என்னை உங்கள் மனைவியாகக் கொள்ள நீங்கள் எள்ளளவேனும் கருதவேண்டாம்!" என்று உறுதியாகக் கூறிவிட்டாள். பாஸ்கர் ஹெலனின் பாசம் அன்று பிளவுபட்டது.

* * *

அன்று மாலைப்பொழுது தன் வழமைப் பிரகாரம் ஆலயத்தில நற்கருணைச் சந்திப்பை முடித்துக்கொண்டு வெளியே வந்துகொண்டிருந்தாள் ஹெலன். அப்போதுதான் அந்த அதிசயக் காட்சியைக் கணடாள். ஆம்!...பாஸ்கர் கையில் செபமாலையுடன் ஆலயத்தில் நுழைந்த காட்சியில் அவள் திகைத்தே போனாள். "ஹெலன்!...நீயா!" ...ஆவலோடு கேட்ட பாஸ்கர் "எங்கே எமது பாசம் பிளவுபட்டதோ அங்கே திரும்பவும் சந்தித்திருக்கிறோமல்லவா?" ...என்று வினவினான். ஹெலனால் பேசவே முடியவில்லை. "ஹெலன்!...எனது வெளிநாட்டுப் பயிற்சியினபோது ஏற்பட்ட அனுபவங்கள் மூலம் திரும்பவும இறைபதம் நாடும் உத்தமனாகி விட்டேன். இனியும் என்னை ஏற்றுக் கொள்ளத் தடையில்லையே!..." எனத் தொடர்ந்தான் பாஸ்கர். என கதையை நீ அறியத்தான் வேண்டும். எனது அன்னை நற்கருணைச் சந்திப்பை அடிக்கடி மேற்கொள்வாள். அப்படி ஒரு நாள் ஆலயஞ் சென்று திரும்பும்போதுதான் வாகனமொன்றில அடிபட்டு உயிர் துறந்தாள். இச்சம்பவம் எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனால் நான் இறைவனைத் தூஷித்து நிரீச்சுரவாதியானேன். நான் வெளிநாட்டில் இருந்தபோது இவ்விதமே ஆலயத்தில் நற்கருணைச் சந்திப்பை முடித்துக்கொண்டு வெளியேறிய அன்னையொருத்தி விபத்தொன்றினால் ஸ்தலத்திலேயே மாணமானதைக் கண்ணுற்றேன். பத்தே பிராயமுடைய அவள் மகள் ஓடிவந்து அன்னையின் சடலத்தை அணைத்துக்கொண்டு "அம்மா! கடைசிவேளையில் நற்கருணை சந்திக்

[மறுபக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானஉபதேசப் பரீட்சை 1969.
## (மாதிரி வினு)
### நாலாம் வகுப்பு

நேரம் : 1 மணி. சுட்டுஇலக்கம்.

எல்லாவிடைகளேயும் இவ்வினுப்பத்திரத்திலேயே எழுதுக.

1. சரியாயின் '√' என்றும் பிழையாயின் '×' என்றும்குறிப்பிடுக
   - அ. யேசுவின் அப்போஸ்தலர் பத்துப்பேர் ( )
   - ஆ. ஆபேல் காயீனக் கொன்றுன். ( )
   - இ. யேசு கடவுளானபடியால் எல்லாம் அறிவர். ( )
   - ஈ. ஏரோதிடம் மூவிராசாக்களைப் போகாது தடுத்தவர் சூசையப்பர். ( )
   - உ. சாவான பாவத்துடன் சாகிறவர்கள் நரகத்துக்குப் போகிருர்கள். ( )
   - ஊ. யாக்கோப்பின் இளேய மகன் யோசேப்பு. ( )
   - எ. யேசுநாதர் பன்னிரண்டாம் வயதில் காணுமற் போனுர். ( )
   - ஏ. கிறீஸ்தவர்கள் மூன்று கடவுள்களே ஆராதிக்கிருர்கள். ( )
   - ஐ. யோசேப்புவை முப்பது (30) வெள்ளிக் காசுக்கு விற்ருர்கள். ( )
   - ஒ. யூதர்களே விடுதலே செய்யக் கடவுள் மோயீசனே அழைத்தார். ( )
2. ஒரு சொல்லில் விடை தருக.
   - அ. யேசுவோடு நாம் ஒப்புக் கொடுக்கும் பலி எது?
   - ஆ. ஒரு நாளில் மூன்றுமுறை சொல்லும் செபம்யாது?
   - இ. பூமியிலுள்ள கடவுளின் இராச்சியம் எது?
   - ஈ. அப்போஸ்தலர்களேப் பின்தொடர்ந்து வருபவர்கள் யார்?
   - உ. யேசுவுக்காக முதல் உயிர் துறந்தவர்கள் யார்?
3. குறிட்ட இடங்களே நிரப்புக.
   - அ. யேசு தேவன் என்றும் .............. என்றும் நாம் விசுவசிக்கிருேம்.
   - ஆ. சம்மனசு மரியாயைக்காண .............. ஊருக்கு வந்தார்.
   - இ. யேசுக்கிறீஸ்துநாதர் கடவுள் என்பதை அவரது சொல்லாலும் .......................... அறிகிருேம்.
   - ஈ. தெரிந்துகொள்ளப்பட்ட மக்களின் தந்தை ........
   - உ. மனத்தரித்திரர் .............. ஏனெனில் .............. .............. அவர்களுடையது.
4. யாரால் கூறப்பட்டது?
   - அ. "உத்தானமும் உயிரும் நாமே" ..............
   - ஆ. "பலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே?"
   - இ. "நீ என்னே நேசிக்கிருயா?" ..............
   - ஈ. "பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்." ..........
   - உ. "இதோ! ஆண்டவருடைய அடிமை" ........ .....
5. பின்வரும் இலக்கங்களேப் பொருத்தமாகப் போடுக.

   3, 5, 6, 7, 40
   - அ. திருச்சபையின் கட்டளேகள். ( )
   - ஆ. தேவதிரவிய அனுமானங்கள். ( )
   - இ. தேவசம்பந்தமான புண்ணியங்கள். ( )
   - ஈ. கடன் திருநாட்கள். ( )
   - உ. தபசுகால நாட்கள்.
6. சரியான சொல்லின்கீழ்க் கீறிடுக.
   - அ. அமல உற்பவமாதாவின் திருநாள், (மார்கழி 8, ஆவணி 15, புரட்டாதி 8)
   - ஆ. எகிப்திலிருந்து இஸ்ராயேல் மக்களேக் கூட்டிச் சென்றவர். (ஆபிரகாம், ஈசாக், மோயீசன்)
   - இ. பத்துக் கற்பனேகள் கொடுத்த இடம். (சீனுமலே, கல்வாரிமலே, தபோர்மலே)
   - ஈ. கிறீஸ்தவர்கள் கர்த்தரின் நாளாக அனுசரிப்பது. (வெள்ளி, சனி, ஞாயிறு)
7. பின்வரும் ஒவ்வொன்றைப் பற்றியும் ஒரு வசனம் எழுதுக.
   - அ. தேவதாய் : ..................................... ..........
   - ஆ. காவற்சம்மனசு : ...........................................
   - இ. பரிசுத்ததந்தை : ...........................................
   - ஈ. திருப்பலி : ...................................................

## பத்திரிகையாளரின் வாய்ப்புகள்

இந்திய கேரளதேசத்தில் சிறுவர்களுக்கெனப் புதிதாகப் பிரசுரஞ்செய்யப்படுகிற ஒரு சஞ்சிகையின் ஆரம்பதினக் கொண்டாட்டத்தில் கேரளதேச கருதினுலாகிய பாறெக்கட்டில் அடிகளார் பேசுகையில்; "இன்று ஒவ்வொரு கத்தோலிக்கனுக்கும் விசேஷ கடமைகள் இருக்கின்றன. ஆனுல் பத்திரிகைகள் உலகில் வகிக்கும் உன்னத ஸ்தானத்தைப் பார்க்கும்போது பத்திரிகையாசிரியர்களுக்கும் எழுத்தாளர்களுக்குமுள்ள விசேஷவாய்ப்புகளே நாம் இலகுவில் உணர்ந்து கொள்கின்ருேம். இவர்கள் உலகத்தைத் திருத்தியும் அமைக்கலாம். சீர்கெடச் செய்தும் விடலாம். ஆகவே தனது உன்னத பொறுப்பை உணர்ந்து அதற்குத் தக்கமுறையில் உழைத்துவர அவர்களே இரந்து கேட்டுக்கொள்ளுகின்ருேம்" என்ருர் அடிகளார்.

## சற்பிரசாதம் கொடுக்கும் அதிகாரம்

இந்தியாவில் கலிகட் பிரதேசத்தில் சேவைசெய்து வரும் ஜேர்மனிதேசத்தைச் சேர்ந்த கன்னியாஸ்திரி ஒருவருக்குத் தான் சேவை செய்து வரும் விசுவாசிகளுக்குக் குருவானவர் இல்லாதசமயத்தில் சற்பிரசாதம் கொடுக்கும் அதிகாரத்தைப் பரிசுத்த தந்தை அளித்திருக்கிருர். இக் கன்னியாஸ்திரி சிஸ்டர் பெத்ரு மொனிகாம் என்பவரே. பதுரம் கிராமத்தின் வறிய மக்களுக்குச் சேவை செய்துவரும் "அன்பின் இருப்பிடம்" என்னும் தரும ஸ்தாபனத்தை நிறுவியவர் இவரே. இவரை விட இந்தியாவில் இந்த மகிமை அளிக்கப்பட்ட கன்னியாஸ்திரி உலக கீர்த்தி பெற்ற தெரேசா தாயாரே.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனக்கு இரண்டு வருடமாக இருந்துவந்த வயிற்றுவலி அர்ச். மத்தேயு, அர்ச். யூதா ததேயு, அர்ச். செபஸ்தியார், அர்ச். வனத்து சின்னப்பர் இவர்களின் வேண்டுதலினுல் குணமானது. நேர்த்திப்படி பிரசுரிக்கக் காலதாமதம் ஆனதால் மன்னிப்புக் கோரி, இப்புனிதர்களின் புகழ் என்றும் விளங்கவும், என் வியாதிகள் பூரணமாக நீங்கி குணம் பெறவும் வேண்டுகிறேன்.

ஆண்டவரின் ஊழியன்.

118/69.

## பிரிந்தவர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் பழக்கத்தை எனக்கு அழுத்தமாகக் காட்டிவிட்டா சென்றீர்கள்" என்று புலம்பினுள். அன்றிலிருந்து அச் சிறுமி ஒவ்வொரு நாளும் தாயில்லாமலே நற்கருணேச் சந்திப்பை மேற்கொண்டதைக் கண்ணுரக் கண்டேன், பத்து வயதுச் சிறுமியின் அன்னே எனக்கில்லேயே என வருந்தினேன், மனம் மாறினேன். இறைவன் பதம் நாடினேன். ஆம்!...உத்தம கத்தோலிக்கனுனேன். இறைவன் எனக்கு உடனடியாக என்ஹெலனேயும் பரிசாகத் தந்து பலன் அளித்துவிட்டார்"என்று கூறிமுடித்தான் உவகையுடன்.

பிரிந்தவர் கூடினுல் பேசவும் வேண்டுமா?...ஒன்றுபட்ட இருதுருவங்கள் நற்கருணே நாதருக்கு நன்றி செலுத்த திரும்பவும் தேவாலயத்துள் நுழைந்தன.

"புதிய சுண்டிக்குளிச் சந்திக்கருகாமையில்"

ஏ. எவ்.

றேமண்ட்ஸ்,

147, மெயின்வீதி,

யாழ்ப்பாணம்.

குறைந்த செலவில்

மனம்நிறைந்த

அந்தியசேவை

ரூபா 175/-

உயர்தர பிரேதப்பெட்டிகள்

ரூபா 50/-

"எங்களுக்கு அறிமுகமானவர்கள், எங்களே அன்போடு நேசித்தவர்கள் அனேவரதும் செபங்கள் இத்தருணம் எங்களுக்குத் தேவை."

(புனித எப்ரேம்)

## நினேவு கூருவோம்

### அருள்மரி பிலோமினம்மா அவர்களின் மூன்ரும் வருட மரணஞாபகம்

பிறப்பு: 15-10-1944 இறப்பு: 1-10-1966

மண்ணில் நின்றும் மறைந்து, எங்கள் எண்ணம் விட்டு அகலாத அருமை மகளும், சகோதரியுமாகிய அருள்மரி பிலோமினம்மா இவ்வுலகை விட்டுப்பிரிந்த 3-ம்வருட ஞாபகமாக 30-9-69 சின்னமட்டுக்கொல்லே அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் திவ்விய பலிபூசை ஒப்புக்கொடுக்கப்படும். அவ்வேளேயில் இனபந்துக்களும், அன்பர்களும் பங்குபற்றி அவவின் ஆன்மசாந்திக்காக மன்ருடும்படி தயவுடன் கேட்டுக்கொள்ளுகிருேம்.

நேச மகளே இழந்து துயருறும்: தந்தை; லாசர், தாய், தனபாக்கியம்; மற்றும சகோதர சகோதரிகள்.

சின்னமட்டுக்கொல்லே,
தலவாக்கொல்லே. 117-66

* * *

"சீவியத்தில் என்னே நேசித்த அன்பர்களே
மரணத்தில் என்னே மறவாதீர்கள்."

### அலெக்சாண்டர் மரியான்தம்பி அவர்களின் முதல்வருட நிறைவுதினம்

தோற்றம்: 29-8-1898 மறைவு: 27-9-1968

புலம்பல்

ஓராண்டு கழிந்திடினும் ஐயோ! எங்கள்
உள்ளத்தின் நெருப்பின்னும் ஒழியவில்லே
சீராக எமை வளர்த்த அருமை ஐயா
செகமீதில் உன்னுருவம் காண்பதெப்போ
பேரான உன்பேரும், கோயிற் தொண்டும்
பெருமதிப்பும் இனிநாங்கள் பார்ப்பதெப்போ
நேராக இறைவனடி சேர்ந்திடவே
நித்திய மூமக்காய்மன் ருடுவோமே.

நிகழும் 27-ந்தேதி அன்னுரின் ஆன்மஇளேப்பாற்றிக்காக ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்தில் துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர் மற்றும் நண்பர்கள் இவரின் ஆன்மசாந்திக்காக மன்ருடும்படி வினயமாய்க் கேட்டுக்கொள்ளுகிருேம்.

பிரிவால் துயருறும்: மனேவி, மக்கள், மருமக்கள், பேரர், உற்ருர், உறவினர்.

கிழக்குவீதி, ஊர்காவற்றுறை. 116-69

* * *

✠

### W. தேக்கிளாப் பெர்னுண்டோ
அவர்கள்
அமரத்துவம் அடைந்த
## 1-ம் வருட மரணஞாபகம்

பிறப்பு : 23—9—1893. இறப்பு : 29—9—69.

"இரக்கமுள்ள யேசுவே" மரித்த W. தேக்கிளாப் பெர்னுண்டோவின் ஆத்துமத்திற்கு நித்திய இளேப்பாற்றியைக் கொடுத்தருளும்.

மண்ணேவிட்டு மறைந்தாலும் எம்மனக் கண்ணேவிட்டு என்றுமே அகலா அருமை மாமியும், கருக்குப்பனேப் பாடசாலேயில் 30 வருடமாகச் சேவைசெய்து இளேப்பாறியபின், போளவத்தை "இரக்கத்தின் மாதா" மகளிர் பிரசிடியத் தலேவி, உபதலேவியாக மாறிமாறி 16 வருடம் சேவைபுரிந்து, எத்தனேயோ ஆன்மாக்களே நல்வழிப்படுத்தியவருமான W. தேக்கிளாப் பெர்னுண்டோ இறைவனடி சேர்ந்து 1-ம்வருடம் இம்மாதம் 29-9-69-ல் பூர்த்தியாகிறது. எனவே, இதனேக்கண்ணுறும் சகலரும் இவவின் ஆன்ம இளேப்பாற்றிக்காக மன்ருடும்படி வேண்டுகிறேன்.

மருமகள் : W. M. பெர்னுண்டோ

* * *

### எமிலிகிறேஸ் எவறிஸ்ரா அமரத்துவம் அடைந்த முதல்வருட நினேவுநாள்

பிறப்பு: 7—6—1955 இறப்பு :29—9—1968

"நெஞ்சம் இருக்கும்வரை மறந்திடுவோமோ"

எங்களால் என்றும் மறக்கமுடியாத எங்கள் அருமைச் செல்வி எமிலிக் கிறேஸ் எவறிஸ்ரா இவ்வுலகம்நீத்து 29-9-69இல் வருடம் ஒன்று நிறைவெய்துவதால் இதைவாசிக்கும், அறியும் இறைமக்கள் எல்லோரும் இவவின் ஆன்மசாந்திக்காக இறைவனே இறைஞ்ச இரந்து நிற்கின்ருேம். 29-9-69இல் சில்லாலே, யாழ்ப்பாணம், முருங்கன் ஆகியாம் இடங்களில் இவவின் ஆன்மசாந்திக்காகப் பலிபூசை ஒப்புக் ஒப்புக்கொடுக்கப்படும்.

இவவை இழந்து மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும்:
பெற்ருேர், சகோதரர்கள்

முருங்கன் 115-69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிசுத்த கன்னித்தாய்க்கு மகமதிய உள்ளங்களிலே மாண்பு மிக்க ஓரிடம் இருக்கின்றது; மகமதியரின் மறை நூலிலும், பழம் உரைகளிலும் அன்றாட நடை முறைகளிலும் மாமரி சிறப்பிடம் பெறுகிறார் என்பதை இக்கட்டுரை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.**

# மாமரியும் மகமதியரும்

ரா. ஜே. அமலராசு

உணவே கிடைக்காத காலம். மகமது நபிநாயகத்தின் அருமைக் குமாரத்தி பாத்திமா மனிதர் வியக்கும் முறையில் உணவைப் பெறுகின்றாள். அப்பொழுது நபிகள் நாயகம் அவளை நோக்கி, "உனக்கு உணவு எங்கிருந்து கிடைத்தது?" என்று கேட்டார். அவள் புன்னகை பூத்த இதழ்களோடு "இறைவனிடமிருந்தே உணவைப் பெற்றேன்; காரணம் கடவுள் யாரை விரும்புகிறாரோ, அவருக்கு வரையறையின்றி வழங்குகிறார்" என்று மறுமொழி கூறுகிறாள். நபிகள் தன் மகள் மங்கையரிலெல்லாம் மாண்பு மிக்க மரியாயை நிகர்த்தமைக்காக அவளை மனமார வாழ்த்தினார் என்பது ஒரு வரலாறு. இதிலிருந்து நபிகள் நாயகம் மாமரியை மதித்த முறை விளங்குகின்றது. மரியாயின் சிறந்த பெருந்தகைமையை வெளிப்படையாகப் பின்வருமாறு பாராட்டுகிறது திருகுரான்: "மரியே உண்மையாகவே இறைவன் உம்மை அணங்குகளில் எல்லாம் மேம்பட்டவளாகத் தெரிந்தெடுத்துக்கொண்டு புனிதமாக்கினார் என்று வானதூதர் கூறிய வாழ்த்தை நினைவுகூர்ந்தருளும்"

(குரான் 3-42).

கடவுள் அவளைக் களிப்போடு கையேற்றுக் கொண்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்தார். (குரான் 3-32)

மகமதிய மறைநூலைப் புரட்டும் எவரும் அதில் மரியாயைப்பற்றிக் கூறப்படும் இத்தகைய புகழ் மொழியைப் பார்க்காமல் இருக்கமுடியாது. மரியாயின் இவ்வுயரிய பெருந்தகைமை எவருக்குமே கிட்டாத தலைசிறந்த பேறு. அவள் இறைவனின் அன்னை ஆவதற்காக அதனை இறைவனிடமிருந்தே பெற்றாள் என்பன போன்ற கருத்துக்களும் இஸ்லாமுக்குப் புறம்பானதல்ல.

**குரானில்:** மாமரியின் பிறப்பு—கோயிலில் அவளது வாழ்க்கை — வானதூதர் அவளை வாழ்த்திய குறிப்பு—சூசையப்பர் அவள்பால் கொண்ட ஐயப்பாடு — எலிசபெத் அவளை எதிர்கொண்டு சந்தித்த நிகழ்ச்சி — யேசுவின் பிறப்பு — எஜிப்துக்கு ஓடிய நிகழ்ச்சி போன்ற எத்தனையோ தொடர்புக் குறிப்புகளைக் காணலாம். உதாரணமாக மரியாயின் பிறப்புப் பற்றி: "யோவாக்கியின் வாழ்க்கைத் துணைவி அன்னம்மாள். அவள் ஒருநாள் ஒரு மரத்தின்கீழ் நின்றுகொண்டிருந்தாள். அம்மரத்தில் ஒரு பறவை கூடுஒன்று கட்டியிருந்தது. அவளது கண்கள் அக்கூட்டை நோக்கின. தாய்ப் பறவை தன் இளங்குஞ்சுகளை மெதுவாகக் கோதிக்கொண்டிருந்தது. அக்காட்சி அவளுடைய வாழ்க்கையை அப்படியே படம்பிடித்துக் காட்டியது. அவளுக்குக் குழந்தை இல்லை, வயதோ முதிர்ந்துவிட்டது. உடனே அவள் கடவுளுக்கு ஓர் உறுதிமொழி அளித்தாள். எனக்குக் குழந்தை பிறந்தால் அதை இறைவனின் திருப்பணிக்கே அளித்துவிடுவேன் என்று. அவள் விரும்பியவாறே ஒரு பெண் குழந்தை பிறந்தது; ஆனால் பெண் குழந்தை இறைவனுக்குத் திருப்பணி செய்யமுடியாதே என்று வருந்தினாள். தான் பெற்ற செல்வத்தைக் கடவுள்தான் தந்தார் என்று அறியும்வரை மனக் கலக்கம் அவளைவிட்டு நீங்கவில்லை."

(குரான் 3-31)

**மரியாயின் தூய்மைபற்றி:** மகமதியரின் பரம்பரையும் குரானும் தேவதாயின் தூய்மைக்குச் சான்று பகருகின்றன. மகமதிய மறை நூல் வல்லுனரும் இதைப்பற்றித் தங்கள் மனக்கருத்தினைத் தெரிவித்துள்ளனர். "உலகில் தோன்றும் ஒவ்வொரு குழந்தையும் சென்மப்பாவத்தோடுதான்தோன்றுகின்றது; ஆனால் மரியன்னையும் அவள் மைந்தன் யேசுவும் இதற்கு விதிவிலக்கு" என்று மகமதிய தீர்க்கதரிசியும், ஆல்புக்கரி என்னும் பரம்பரை வல்லுனரும் ஒருவாய்ப்படக் கூறுகின்றனர். தனது கன்னிமையை இழக்க நேர்ந்திருந்தால் மரியாள் தாய்மையை விரும்பியிருக்கமாட்டாள் என்ற கருத்தைக்கொண்ட குறிப்பு குரானில், காணப்படுகின்றது. "என் ஆண்டவரே; நான் மனிதனையே அறியாதவள், நான் எப்படி குழந்தைக்குத் தாயாக முடியும்?"

(குரான் 3-47)

மேலும் அவள் கோவிலில் வளருவதற்கும், வானதூதரின் பணிவிடைகளைப் பெறுவதற்கும் பேறுபெற்றாள் எனறால் அதற்குக் காரணம் அவளது தூய்மையின் சிறப்புத்தான். சிலசமயங்களில் சக்கரியாஸ் மரியாளைக் காணச் செல்வது வழக்கம். அவ்வாறு அவர் அவளைக் காணச்சென்ற போதெல்லாம் குளிர் காலக் கனிவகைகளைக் கோடை காலத்திலும், கோடை காலக் கனிவகைகளைக் குளிர்காலத்திலும் அவருக்குத் தந்துமகிழ்வித்தாளாம் மாமரி. மேலும மரியாயின் கன்னிமையைக் காப்பதற்காகவே யேசு தொட்டிலிலிருந்து பேசியதாகவும், ஒரு குறிப்பு குரானில் கூறப்பட்டிருக்கின்றது. மாசற்றதன்மை தீர்க்கதரிசிகளின் சிறப்பியல்புகளில் ஒன்று. குரான் மரியாயைத் தீர்க்கதரிசியாக ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம் கடவுள் தீர்க்கதரிசன உரிமையைப் பெண்களுக்கு அளிப்பதில்லையாம். எனினும் குரான் மரியாயை மாபெரும் புனிதையாகப் போற்றுகின்றது. இக்கருத்து "அல்பைதாவி" என்னும் சரித்திர வல்லுநர் கூறுவதாகும்.

தேவதாயின் கன்னிமையைப்பற்றி மேலும் சான்றுகள் உள்ளன. "தனது கன்னிமையைக் காத்த மரியாயை நினைவுகூருங்கள்; நான் என் ஆவியை அவளுக்கு ஈந்தேன். நான்தான் அவளைப் படைத்தேன்; அவள் மைந்தன் மாந்தருக்கெல்லாம் ஓர் அறிகுறி" (குரான் 2-9.) என உரைக்கின்றது குர்ஆன் மறைநூல்!!

"கன்னித்தாய்" என்னும் பேறு வரலாற்று ஏட்டில் தனிச் சிறப்புடையதாகும். யேசு கன்னிமரியாளின் மைந்தனாகப் பிறந்தது ஒரு விதிவிலக்கான பேறுதான். ஆனால் கன்னி அன்னையாவது என்பது முடியாத காரியம் — இஃது ஒருசிலரது கூற்று. இக்கூற்று தவறு என்று மறுக்கப்பட்டுள்ளது. யேசுவின் பிறப்பே அதற்கு ஆதாரமாகக் கையாளப்பட்டது. மகமதிய பரம்பரைக்கும் இதேஎதிர்ப்பு இருந்தது.

**யேசுவின் பிறப்பு:** மரியாயிக்குப் பேறுகாலம் நெருங்கியபோது தொலைவில் உள்ள ஓரிடத்துக்குப் போக நேரிட்டது. போகும் வழியில் பேறுகாலத்திற்குரிய அறிகுறிகள் அவளுக்குத் தோன்றின. எனவே, அவள் அருகேஇருந்த ஒரு பேரீச்ச மரத்தடியில் தங்கினாள். அம்மரம் காய்ந்திருந்தது: ஆனால் அவள் அதைத் தொட்டவுடன் அது தளிர்த்தது. காய்ந்திருந்த அம்மரத்தில் கனிகள் பல குலுங்கின. அந்நிகழ்ச்சி அவளுக்கு ஆறுதலாக இருந்தது. மரியாயின் மாண்புமிக்க கற்புக்கு இஃதோர் எடுத்துக் காட்டு.

குரானில், மூவேந்தர் வருகை, கலிலேயா திரும்புதல், யேசு காணமற் போதல், கானா ஊரில் நடந்த புதுமை இவற்றைப்பற்றிய குறிப்புக்கள் இடம்பெறவில்லை. எனினும் மகமதிய எழுத்தாளர்களின் எழுத்தோவியங்கள் அக்குறிப்புக்களை ஒரு சிறிது அறிய உறுதுணையாக இருக்கின்றன. தீர்க்கதரிசிகளின் கதைகள் என்னும் நூலில் கலிலேயா திரும்புகையைப் பற்றிய செய்தி காணப்படுகிறது. யேசு பிறந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின், ஏரோது இறந்தான். இறைவன் ஏரோதுவின் மரணச் செய்தியை மரியாளுக்கு அறிவித்து வளனாரோடு (சூசையப்பரோடு) சீரியாவுக்குத் திரும்பிச் செல்லப் பணித்தார். எனவே, மரியாளும் சூசையப்பரும் திரும்பிச் சென்று கலிலேயாவில் உள்ள நசரேத்து ஊரில் தங்கி இருந்தார்கள்.

**மரியாயைப்பற்றிய வேறு சில பழங் கதைகள்:** பல தேசங்களில் வழங்கும் பழங் கதைகள் பல மரியாயின் பெயரோடு தொடர்புகொண்டுள்ளன. சிறப்பு வாய்ந்த பெண்களில் பலர் "மரியாம்" என்னும் பெயர்பூண்டவர்களாக இருக்கிறார்கள். பேறுகாலம் நெருங்கும் போது, பெண்கள் பாதுகாப்பிற்காக மரியன்னையிடம் இரந்து கேட்கிறார்கள்.

பேறுகாலத்தில் "மரியாம் கா பஞ்சா" என்னும் நறுமணம் வாய்ந்த ஒருவகைப் புல்லைப் பெண்களுக்குக் கொடுப்பது தொன்றுதொட்டு வந்த பழக்கமாகும். மரியன்னை, தனக்குப் பேறுகாலம நெருங்கியபோது, அப்புல்லைத் தனது மெல்லிய விரல்களால் பறித்தாளாம். உடனே அவளது விரலின் உருவம் அதில் பதிந்துவிட்டதாம். பேறுகாலத்தை எளிதாக்குவதற்காக அப்புல் நனைக்கப்பட்டுப் பெண்களின் அருகில் வைக்கப்படுமாம். அப்புல்லை நனைத்த தண்ணீர் தாய்மார்களுக்குக் குடிக்கக் கொடுக்கப்படுமாம். இத்தகைய பழக்கம் ஈரான் போன்ற இடங்களில் இன்னும் உள்ளதாகக் கூறுகிறார்கள்.

பேரீச்சம் பழத்தைத் தாய்மைப்பேறு அடைபவர்கட்குக் கொடுப்பது மற்றொரு தொன்றுதொட்டு வந்த பழக்கமாகும். காரணம் மரியாள் யேசுவை ஈன்றபொழுது பேரீச்சம்பழம் அருந்தியதாக ஒரு பழஞ் செய்தி உலவுகிறது.

**அக்பர் ஜஹாங்கீர் அவையில் மரியன்னை:** மாமரியும் யேசுவும் என்றால் அக்பருக்கு ஒரு தனி மகிழ்ச்சி. 1580-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் அக்பரது அவைக்குச் சென்ற யேசுசபைக் குருக்கள் உலக மீட்பரின் படத்தையும் கன்னித்தாயின் படத்தையும் அவருக்கு அளித்துச் சென்றார்கள். 1590-ம் ஆண்டு மரியன்னையின் விண்ணக எழுந்தேற்றத் திருவிழா நடைபெற்றது. அவ்வமையம் அக்பரும் தனது அவையில் மரியன்னைக்கு ஓர் இருக்கை அமைத்து மரியன்னையின் படத்தை அனைவரும் வணங்கப் பணித்தார். அக்பரின் முதல் மகன் ஜஹாங்கீரும், மரியாயின் படத்தையும் யேசுவின் படத்தையும் ஆக்ராவில் உள்ள தனது அரண்மனையில் தீட்டுமாறு தன் ஆட்களுக்குப் பணித்தான். அவன் தனது அரியாசனத்தின் ஒருபுறம் யேசு உலக உருண்டையை ஏந்திக் கொண்டிருப்பதுபோலவும் மறுபுறம் கன்னித்தாயின் படத்தையும் தீட்டுவித்தான். தவிரவும் மரியன்னையின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் திரைச் சீலைகளும் அவனிடம் இருந்தன.

மகமதிய உலகின் பல்வேறு மூலை முடுக்குகளிலும் மரியன்னையின் பால் தனிப்பற்று இருந்து வந்துள்ளது. பாத்திமா சுரூபம் மகமதிய மண்ணிலே சுற்றி வந்தபோது, மகமதியர் அதற்கு அளித்த மகத்தான வரவேற்பும்போற்றுதற்குரியது. மரியன்னையை புகழ்வதற்காக, மகமதியரில் பலர் கத்தோலிக்கர் நடத்திய திருச்சடங்குகளில் எல்லாம் கலந்துகொண்டனர். அது மட்டுமா? பாத்திமா நாயகியின் உருவப் பவனியில் வந்த பெருங் கூட்டமான மக்கள் தங்களது மசூதிமுன் ஜெபிக்கவும், ஊர்வலம் நடத்திச் செல்லவும் இசைவு தந்தார்கள் என்றால் அவர்கள் மரியன்னைபால் கொண்டுள்ள பற்று எத்தகைய சிறப்பினை உடையதாக இருக்க வேண்டும்.

**இந்நூற்றாண்டில்:** 1917-ம் ஆண்டு மரியன்னை மூன்று சிறார்க்கு பாத்திமா நகரில் காட்சிதந்தாள். அக்காட்சி மகமதியர் மரியன்னைபால் நம்பிக்கை கொள்ளுவதற்குச் சான்றாக நின்றது. "பாத்திமா" என்னும் பெயரின் தோற்றத்தை அறிவது ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியூட்டக்கூடியதாகும். போர்த்துக்கல்லிலிருந்து மகமதியர் துரத்தப்பட்ட காலம் அது. அப்போது ஒரு கத்தோலிக்க அரச இளைஞன் "பாத்திமா" என்னும் ஒரு மகமதிய மங்கையைக் காதலித்தான். அம்மங்கை ஒரு மகமதியத் தலைவனின் மகள். அவளும் திருமறையில் சேர்ந்து அவனுக்கு வாழ்க்கைத் துணைவியானாள். அவன் அவளை மிகுதியாக நேசித்தான். எனவே, தனது நகரத்திற்குப் பாத்திமா என்று பெயரிட்டான். இவ்வாறு நமது அன்னை காட்சி தந்த இடப்பெயருக்கும் நபிகள் நாயகத்தின் மகளான பாத்திமாவின் பெயருக்கும் தொடர்பு ஏற்பட்டது.

மகமதியர் அன்னைக்கு ஆலயங்கள் பல எழுப்பியுள்ளனர். அத்தகைய ஆலயங்களை ஆசியா மைனரிலும் இந்தியாவிலும் காணலாம். மகமதியர் மரியாய்க்குப் பலவகைகளில் வணக்கம் செலுத்துகின்றனர். சிலர் துருக்கியில் மரியாயைக் கடவுளின் அன்னையாக மதித்து வணங்குகின்றனர். வேறு சிலர் மரியாயின் திருவிழாக்களைக் கொண்டாடுகின்றனர். அல்ஜீரியாவில் "செல்லாமரியாம்" என்பது புகழ்வாய்ந்தது. கணக்கற்ற முகமதியர் அக்கு சென்று மரியாயிடம் வேண்டிக்கொள்ளுகின்றனர்.

**எருசலேமில் மரியன்னை:** எருசலேமில் உள்ள ஆரோபண ஆலயத்தில் சீரியருக்கும் ஆர்மேனியருக்கும் பீடங்கள் இருப்பதுபோல மகமதியருக்கும் ஒரு பீடம் இருக்கிறது. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு அரபிய வரலாற்று ஆசிரியர் அதைப் பற்றி ஒரு விந்தையான கதை எழுதியுள்ளார். மகமதுநபியின் வரலாற்றை எழுதிய அவர் தனது நூலில் பின்வரும் செய்தியை விளக்கியுள்ளார்;

ஒருநாள் இராப்பயணம் முகமதுநபி வானதூதர் கபிரியேலை நோக்கி தாம்கண்ட ஒரு ஒளியின் விளக்கத்தைக் கேட்டார். வானதூதர் மறுமொழியாக வலதுகைப்புறத்திலுள்ள ஒளி உம் உடன் பிறந்தானாகிய தாவீதின் (Mihrab) கல்லறையைக் குறிக்கிறது. இடது புறத்திலுள்ள ஒளி உன்உடன் பிறந்தாள் மரியாயின் கல்லறை மீது உள்ளது என்று கூறினாராம்.

**மெக்காவில் மரியன்னை:** மகமது வாழ்ந்த காலத்தில் மெக்காவில் "காபா" என்னும் கருங்கல் இருந்தது. அங்கே மரியன்னையின் படம் ஒன்றும் இருந்ததாம். இக்கருத்தைப் பண்டை மகமதிய எழுத்தாளர் ஒப்புக்கொள்ளுகின்றனர். மகமதியர் அப்படத்தைக் "கபா" அழியும் வரை வணங்கிவந்ததாக "ஆஜ்ராகி" (Azraqui) கூறுகிறார்.

**மரியன்னையின் இறுதி நாட்கள்:** யேசு சிலுவையில் இறக்கவில்லை; விண்ணுலகிற்கு இறைவனால் எடுத்துச் செல்லப்பட்டார் என்று மகமதியர் பொதுப்பட எண்ணுகிறார்கள். பிறகு பலநாட்கள் சென்றன. அதன்பின்னர்தான் யேசு மரியாய்க்குத் தோன்றி எல்லா அப்போஸ்தலர்களையும் சுவிசேஷத்தை எடுத்தோத அனுப்புமாறு அவர்களுக்கப்பணித்தார். ஏழெட்டு ஆண்டுகளின்பின் மரியாள் மரணமானாள். அவள் இறக்கும்பொழுது 51 வயது, ஆனால் மகமதிய பாம்பரை அவள் இறப்பைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை. வென்சின்க் (Wensinck) மரியாயைப்பற்றி எழுதிய கட்டுரையில் பின்வருமாறு ஒரு செய்தியைக் கூறியுள்ளார். "மரியாயைப்பற்றிய பழங் கதைகள் மகமதிய பழம் உரைகளில் இடம்பெறவில்லை. மரியாள் நீரோமுன் திருமறையை எடுத்தோதுவதற்காக அருளப்பருடனும் சீமோனுடனும் ரோமுக்குச் (Rome) சென்றதாக ஒரு குறிப்புத்தான் இருக்கிறது" என்றார்.

**முடிவுரை:** முகமது நபியின் மகள் பாத்திமா இறந்தபோது அவர், "என் மகள் பாத்திமா விண்ணில் மரியன்னைக்கு அடுத்தபடியில் மங்காப் புகளோடு இருப்பாள்" எனக் கூறினார். மாமரிக்கு மகமது நபியும் உலகெங்குமுள்ள முகமதியரும் சிறந்த அன்பு செலுத்துவதை மறக்க இயலாது. "ஒரே மேய்ப்பனும் ஒரே மந்தையும்" என்ற கிறிஸ்துவின் திருச்சித்தம் நிறைவேற மகமதியரைப் பொறுத்தவரை மாமரிமேல் அவர்கள் கொண்டுள்ள அன்பே சிறந்த சாதனமாக அமைவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்படங்கள்

## "ஒழுக்கம் கெட்டவர்கள் புழுக்கையிலும் கேடு!"

இன்று மனிதன் கண்களினால் கட்டிக்கொள்ளும் பாவங்களில் மிகுதியான பாவங்களை அவன் திரைப்படங்களின் மூலமாகவே கட்டிக்கொள்கிறான் என்பது பலரும் அறிந்ததே.

நம் நாட்டில் படித்தோரும், பாமரரும், வாலிபரும், முதியோரும், ஆண்களும் பெண்களும் பார்க்கும் ஒன்றாகவே இன்று திரைப்படம் அமைந்திருக்கிறது. இன்று உலகில் ஜப்பானுக்கடுத்த படியாக மிகுதியான படங்கள் எடுக்கப்படுவது நம் நாட்டிலே தான். ஜப்பான் இப்பொழுது ஆண்டொன்றுக்கு 600 படங்கள் எடுக்கிறது. இதற்கடுத்தபடியாக இந்தியா ஆண்டொன்றுக்கு 300 படங்களை எடுக்கிறது. ஒருகாலத்தில் சினிமாப்படங்களை எடுப்பதில் முதலாவதாகநின்ற அமெரிக்கா, இப்போது ஐந்தாவதாக இருக்கிறது. 5கோடி தமிழர்களைக் கொண்ட நம் தமிழகத்தில் இன்று மொத்தம் 1,800 சினிமாத் தியேட்டர்கள் இருக்கின்றன.

எனவே, அதிகமான மக்களும் நம் நாட்டில்தான் இன்று சினிமாவுக்குப் போகும்பழக்கத்தைப் பெற்றுவிட்டனர். சோற்றுக்கு வழியில்லாவிட்டாலும் பரவாயில்லை, கடன்வாங்கியாவது அல்லது எதையும் அடகுவைத்தாவது படம்பார்த்துத் தீரவேண்டுமென்ற பைத்தியம் நம் மக்களில் பலரை இன்று ஆட்டிப்படைக்கிறது. இறைவனே நேரடியாக மக்களுக்குக் காட்சி வழங்குவதாக இருந்தாலும் அவரின்தெய்வீக தரிசனத்தைக் காண்பதற்காகச் செல்லும் கூட்டத்தினரைவிட, சினிமாக்காரி அரைநிர்வாணத் தோற்றத்தில் ஆபாசநடனம் ஆடுகிறாள்என்றால் அவளைக் காண்பதற்காகச் செல்லும் கூட்டம்தான் மிகுதியாக இருக்குமென்று திண்ணமாய் நாம் கூறுமளவுக்கு இன்றைய நிலைமை இருக்கிறது.

பல நகரங்களில் நடிகர்களின் பேரால் மன்றங்கள் அமைத்துக் கொண்டு ஒருவருக்கொருவர் வீணாக மண்டையை உடைத்துக் கொள்ளும் பரிதாபநிலையையும் நாம் காணாமல் இல்லையே!

நாட்டில் ஒழுக்கவாழ்வு இன்று சிதைந்து காணப்படுவதால், காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராச்சாரியர் சுவாமிகள்: "மக்கள் நல்லொழுக்கமிக்க அறவாழ்வு வாழவேண்டுமானால், நாட்டில் கடவுள் பக்தி தழைக்கவேண்டும்" என்றுகூறுகிறார். சுவாமிகளின் கூற்றுப்படி, நாட்டில் கடவுள்பக்தி தழைத்தால்தானே மக்களிடம் ஒழுக்கமான அறவாழ்வு நிலவமுடியும்! ஆனால் இன்று மக்களுக்குச் சினிமா நடிகர்களின்மேல் அல்லவா அடங்காத பக்தி ஏற்பட்டுள்ளது. நிலைமை இவ்வாறு இருக்கும்பொழுது எவ்வாறுநாட்டில் நல்லொழுக்கமிக்க அறவாழ்வை நாம் எதிர்பார்க்க முடியும்?

சில வருடங்களுக்கு முன்பு ஆங்கிலப் பத்திரிகைகளில் ஒன்று "சினிமா நடிகர்-நடிகைகள் ஒழுக்கம் உள்ளவர்களா?" என்று ஒரு கேள்வியைக் கேட்டு அதற்குச் சரியான பதில்எழுதி அனுப்புகிறவர்களுக்கு வெகுமதி வழங்கப்படுமென்று விளம்பரஞ் செய்திருந்ததாம். இதைக்கண்ட பத்திரிகைநிருபர் ஒருவர் பெர்னாட்ஷாவை அணுகி, அதேவினாவை அவரிடம் கேட்டாராம். அதற்குப் பெர்னாட்ஷா அந்நிருபரை நோக்கி: "நடிகர்-நடிகைகள் ஏன் ஒழுக்கமுள்ளவர்களாக இருக்கவேண்டும்?" என்று மறு கேள்வியைக் கேட்டாராம்.

இவ்வாறு பிறர் கேலியாகக் கேட்கும் அளவுக்குச் சினிமாநடிகர்-நடிகைகளின் ஒழுக்கம் இருக்கும்பொழுது, அவர்களைத் தெய்வமாக நினைத்து மன்றங்கள் அமைத்துப் பூஜித்துவரும் பக்தர்களிடம் நாம் எவ்வாறு ஒழுக்கமானஅறவாழ்வை எதிர்பார்க்க முடியும்? 'ஒழுக்கம் கெட்டவர்கள் புழுக்கையிலும் கேடு' என்ற நாடோடிப் பழமொழிக்கேற்ப, ஒருவனை உயர்ந்தவனென்றும், தாழ்ந்தவனென்றும பாகுபடுத்துவது அவனிடம் காணப்படும் ஒழுக்கம் ஒன்றேயாகும்.

நம் நாட்டில் இன்று தாத்தா — பாட்டி நடிகர் நடிகைகளெல்லாம், கதாநாயகன் கதாநாயகியாக நடிக்கும் அளவுக்கு இன்றைய சினிமா உலகம் முன்னேறிவிட்டது. பேர்த்திக்குச் சமமான வயதையுடைய இளம் பெண்ணைக் காதலியாகக் கொண்டு நடிக்கும் தாத்தா நடிகர்களும், இளம் வயது நடிகனைக் காதலனாகக் கொண்டு கவர்ச்சித் தோற்றத்தில் நடிக்கும் கிழட்டு நடிகைகளும் நம் நாட்டில் இருக்கும்வரை, நாடு எவ்வாறு உருப்பட முடியும்?

### தீமையை நாடிச்செல்லும் பைத்தியம்:

உண்மையிலே திரைப்படங்கள் மக்களுக்கு நன்மையைச் செய்யக்கூடிய சாதனம்தான். என்றாலும் அது இன்று சரியான முறையில் மக்களுக்கு நன்மை செய்யும் வகையில் பயன்படுத்தப்படுகிறதா என்றால், 'இல்லை' என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. வெளிவரக்கூடிய அநேக படங்களைப் பார்ப்பதினால் விளையும் நன்மை தீமைகளை எடைபோட்டுப் பார்த்தால் தீமையின்தட்டே தாழ்ந்து நிற்கிறது. எடுத்துக்காட்டாக, நம் தமிழகத்தில் ஆண்டொன்றுக்கு ஏராளமான திரைப்படங்கள் வெளிவந்தாலும், அவற்றில் விரல்விட்டு எண்ணுமளவுக்கு ஒருசிலதான் நல்ல படமாக இருக்கின்றன. 15 ஆண்டுகளுக்கு முன்பு நம் தமிழகத்தில் பக்திப் படங்களே முழுக்க முழுக்க வெளிவந்தன. ஆனால், இன்றோ ஆண்டுக்கு ஒருசில படங்கள் தாம் பக்திப் படங்களாக வெளிவருகின்றன. அதுவும் வெகுவிரைவில் தோல்வி கண்டு டப்பாவுக்குள் புகுந்து விடுகின்றன. காதல் காட்சி நிறைந்த ஆபாசப் படங்களாக இருந்தால் மட்டும் அவை மாதக் கணக்கில் வெற்றிமுரசு கொட்டி ஓடுகின்றன.

இன்றைய மக்களின் மனநிலையைப் புரிந்துகொண்டு படமுதலாளிகளும் காம உணர்ச்சியை எழுப்பும் ஆபாசப் படங்களையே தயாரித்து வெளியிடுகின்றனர். பள்ளியறையில் நடப்பதைப் பகிரங்கமாகக் காட்டும் அளவுக்கு இன்றைய சினிமா உலகம் முன்னேறியுள்ளது. மக்களிடையே ஒழுக்கத்தை நிலைநிறுத்த வேண்டிய சினிமா உலகம், இன்று மக்களின் ஒழுக்கத்துக்கே உலைவைக்கும் முறையில் தான் செயல்பட்டு வருகிறது.

ஆபாசப் படத்தை விரும்பிப் பார்க்கும் மக்கள் கூட்டம் இன்று நம் நாட்டில் மட்டும் அல்ல, எந்நாட்டிலும் இருக்கத்தான் செய்கிறார்கள். 1967ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் திரையிட மறுத்த ஒரு ஆபாசப் படம், நியூஜிலாந்தில் திரையிடப்பட்டபோது அதைக் கண்டு களிப்பதற்காக ஆஸ்திரேலியாவிலிருந்து அநேக ஆண்களும், பெண்களும் ஆகாய விமானமூலம் நியூஜிலாந்துக்குச் சென்று, அப்படத்தைக் கண்டுகளித்திருக்கிறார்கள். தீமையை நாடிச் செல்லும் பைத்தியம் இன்று மக்களை எந்த அளவுக்கு ஆட்டிப்படைக்கிறது என்பதை எண்பிக்க மேலே கூறிய நிகழ்ச்சியே போதுமான சான்றாகத் திகழுகிறது அல்லவா?

ஆபாசக் காட்சிகள் நிறைந்த திரைப்படத்தை ஒருவன் ஒரே ஒருமுறை பார்ப்பினும் அது அவன் உள்ளத்தில் எளிதில் அகற்ற இயலாத தீய விளைவை உண்டுபண்ணி விடுகிறது என்றும், அது அவனுடைய வாழ்க்கை இலட்சியத்தையே மாற்றிவிடுகிறது என்றும், அவனுடைய மன இயல்பையே மாறுதல் அடையச்செய்து விடுகிறதென்றும் மனோதத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

அநேக இளம் வயதினர் சினிமாவில்வரும் காதல் காட்சிகளைப் பார்த்து, அதுபோல் தங்களின் வாழ்க்கையிலும் காதல் நாடகம் நடத்திப் பாழாகின்றனர். இன்னும் அநேக இளம் வயதுப் பெண்கள் சினிமாவில் தோன்றிய நடிகைகளைப் போலவே உடை உடுத்தவும் ஒழுங்கீனமாக நடத்தவும் கற்றுக்கொள்கின்றனர். இப்படிப் பலவற்றையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது, தற்கால திரைப் படங்களினால் நன்மைக்குப் பதில் தீமையே மிகுதியாகக் காணப்படுகிறது. இன்று இத்தாலிய அரசு ஆபாசப்படம் எடுத்த படாதிபதியையும், டைரக்ட் செய்த டைரக்டரையும், நடித்த நடிகர் நடிகைகளையும் பிடித்து உடனே தண்டிக்கிறது! இதனால் இன்று இத்தாலியில் ஆபாசப் படங்கள் எடுக்கப்படுவதே இல்லை. இதே போல் ஜப்பானியப் படங்களும், வங்கப்படங்களும்கூட ஆபாசங்கள் எதுவும் இல்லாத நல்ல படங்களாகத்தான் எடுக்கப்படுகின்றன. இதே முறையை நம் தமிழ்ப்பட உலகும் பின்பற்றலாம் அல்லவா?

### மனிதன் மேலோங்கிவிட்டான்:

இன்றைய திரைப்படங்களில் வரும் காட்சிகள்தான் பெரும்பாலும் ஆபாசமாக அமைந்திருக்கிறதென்றால், பாடல்களும் காட்சிகளைவிட மிகமட்டமான முறையிலே அமைந்திருக்கின்றன. திரைப்படங்களில் புகுத்தப்படும் பாடல்கள் பெரும்பாலும் மக்களின் உள்ளத்தில் தூய்மையான உணர்வை உண்டுபண்ணுவதற்கு மாறாகக் கீழ்த்தரமான உணர்வைக் கிளறிவிடுவதாய் இருக்கின்றன. சிலபாடல்களைக் கேட்கும்போது செவிகளைப் பொத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. அத்துணை ஆபாசமான வார்த்தைகளைக் கொண்டனவாய் இருக்கின்றன அவை.

ஒரு 15 ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த படங்களிலுள்ள பாடல்கள் இப்படி இருக்கவில்லையே! அவற்றில் சங்கீத கானம் தொனித்தது. பக்தி மணம் வீசியது, தூய்மை மிளிர்ந்தது, கேட்பவர் காதுவழிப் புகுந்து, உள்ளத்தைக் கவர்ந்து உருக்க வல்லனவாய் அவை அமைந்திருந்தன. ஆனால் இன்றோ, மனிதன் மேலோங்கி விட்டான் என்றும், நாகரிகம் முதிர்ந்துவிட்டது என்றும் சொல்கிறார்கள். தீமையின் வளர்ச்சியைத்தான் [illegible] என்பது [illegible] புரியாத பெரும் புதிராக உளது.

## 40 வருட ஆசிரிய சேவை

யாழ்ப்பாணம் குருநகர் சந்தியோகுமையோர் மகாவித்தியாலயத்தின் உப-அதிபரான **திரு. S.F.அல்போன்சஸ் அவர்கள்** 40 வருட ஆசிரிய சேவையின்பின் இம் மாதம் 19ம் திகதி இளைப்பாறலாயினர். திரு. அல்போன்சஸ் ஒரு பட்டதாரி. தமிழிலும் ஆங்கிலத்திலும் பயிற்சி பெற்ற ஆசிரியர். தமது நீண்டகால சேவையில் மாதகல், அட்டபாகே, கம்பளை, கண்டி, கரவெட்டி ஆதியாம் இடங்களிலும், யாழ்ப்பாணத்தில் சம்பத்திரிசியார் கல்லூரி, மத்தியகல்லூரி, சந்தியோகுமையோர் மகாவித்தியாலயத்திலும்கடமையாற்றியிருக்கிறார்

## மானுடம் மலர்ந்தது

— சி. சுதந்திரராஜா —

மலர்ந்தது மலர்ந்தது இறைநெறி
மடிந்தது மடிந்தது மருள்வழி!
புலர்ந்தது புலர்ந்தது புதுப்பொ[ழுது
பூத்தது பூத்தது புத்துலகு!

இழிந்தது அழிந்தது நேற்றோடு
இனியவை ஒளிர்ந்தன இன்றோடு
பழித்து மொழிந்தவர் புல்லானர்
பண்பினைக் கொன்றவர் பஞ்[சானர்

பட்டினி தந்தவர் பாழானர்
பாவஞ் செய்தவர் கூழானர்
வட்டியில் வாழ்ந்தவர் எல்லோரும்
வலைதனில் வீழ்ந்தவர் போலா[னர்!

இன்றே டொழிந்தது இருள்வழி
இனிதே மலர்ந்தது அருள்நெறி
என்றே மொழிந்திடு எழிலுறவே
ஏற்ற கோலங் கண்டிடவே!

---

கடவுள் மனிதருக்கு மட்டுங் கொடுத்துள்ள ஒரே அரும்பொருள் அன்பு. அது நெஞ்சுடன் நெஞ்சை உயிருடன் உயிரைப் பிணைக்கும் ஒரு வெள்ளித் தளை. —வால்டர் ஸ் கொட்

---

புதுப்படம் வெளிவந்திருக்கிறது என்பதற்காகச் சினிமாவுக்குப் போவதோ, அல்லது சினிமாப்படம் பார்ப்பது வாழ்வின் ஒரு முக்கிய பகுதி என்று கருதுவதோ தவறு. நாம் சினிமாப் படம் பார்ப்பதை விரும்புவோமேயானால், படத்தின் தலைப்பைக் கண்டு மயங்காமல், அது காண்பதற்குத் தகுதியான படமா, சீர்திருத்தக் கருத்துக்களைத் தாங்கி அறிவுக்கு விருந்தளிக்கும படமா என்பதை அறியவேண்டும். ஒரு படம் திரையிடப்பட்ட முதல் வாரத்திலேயே சினிமாவுக்குப் போய்விடாது ஒன்று இரண்டு வாரங்கள் கழித்துச் செல்வதே நன்று. ஏனெனில், அதற்குள் அது நல்ல படமா, ஆபாசப் படமா என்பதை அதனைப் பார்த்துவந்த மற்றவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளலாம் அல்லவா? இப்படிச் செய்தால் செலவழிக்கும் காசுக்கும் போதிய பயனைப் பெறலாம். இல்லையேல் ஆழந் தெரியாமல் சேற்றில் மாட்டிக் கொண்டவனின் நிலைமையைப் போன்று, பணத்தையும் கொடுத்து, கண்களையும் கெடுத்து, அறிவையும் குறிப்பாக ஆன்மாவையும் பாழ்படுத்திக் கொள்வதாகவே வந்து முடியும்!

நன்றி
இராமை சூ. மிக்கேல்ராஜ்
— சத்திய போதினி

## குரு ஒரு திருஉரு

உலகின் ஒளி குரு.
பூமியின் உப்பு குரு.
ஆன்ம வேட்டைக்காரன் குரு.
நல்ல விதை விதைப்போன் குரு.
நற்கனி தருபவர் குரு.
கிறீஸ்துவின் சகதொழிலாளி குரு.
ஆன்மாக்களின் ஆயன் குரு.
அநேக மக்களின் ஞானத்தந்தை குரு.
கடவுள் வீட்டின் விருந்தளிப்பவர் குரு.
ஆன்ம வைத்தியர் குரு.
உதவி பல புரிபவர் குரு.
மறு கிறீஸ்து குரு.
மக்களால் தூற்றப்படுபவரும் குரு.

இ. பேர்னுட்

## கொழும்பு மறை மாநிலத்தில் 32தமிழ்மறை ஆசிரியத் தொண்டர்கள்

கொழும்பு மறைக்கல்வி நிலைய இயக்குனர், வண. டொன்சிலவெஸ்டர் அடிகளார் அவர்களின் அனுமதியுடன், கொழும்பு செக்கடித் தெரு புனித அன்னம்மாள் பங்குக் கோவிலில் வண. யே. மைக்கல் சவரிமுத்து அடிகளார் அவர்களின மேற்பார்வையின்கீழ் இப்பயிற்சி பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பயிற்சியில் கொழும்பு மறை மாநிலத்தைச் சேர்ந்த, கொட்டாஞ்சேனை, செக்கடித் தெரு, கொள்ளுப்பிட்டி, தெமட்டக்கொடை, கிறண்ட்பாஸ், முகத்துவாரம், கொம்பனித்தெரு, திம்பிரிகஸ்ஸாய ஆகிய பங்குகளைச் சேர்ந்த 8 ஆண்களும 24 பெண்களும் பங்குபற்றினர். இவர்கள் 7மாதகாலமாக வார இறுதி நாட்களில் பயிற்றப்பட்டனர். மீட்பு சரித்திரம், போதனு முறை, சங்க ஏடுகள், ஒழுக்க நெறி, இறைபணி, திருவருட் சாதனம், பிறமத கோட்பாடுகள், கற்பனைகள் மனையியல், மனைத்திட்டம், முதலுதவி, பொதுசுகாதாரம், உடலியல், சமூக இயல் ஆகிய பாடங்களில் பயிற்சி பெற்றனர். இவர்களுக்கு சங். தாயார் றேஸ், வண. பிதா யே. மைக்கல் சவரிமுத்து, வண. பிதா ஆர். ராயப்பு, சங். பிற. ஆர். அல்பிறட், மறை ஆசிரியர்கள் ஜே. எஸ். விக்ரோறியா, ஜே. ஈ. றெமிஜியேஸ் ஆகியோரும் மேலும் விசேட ஆசிரியர்களும் பாடங்கள் போதித்து இவர்களைச் சேவைக்கு ஆயத்தப்படுத்தினர். இவர்கள் தாம் பெற்ற பயிற்சியைக் கொண்டு தத்தம் பகுதிகளில் உள்ள பங்கு மக்களின் மறைக்கல்வியை, பங்குக்குருவின் துணையுடன் மேலும நன்முறையில விருத்தியாக்க சேவை புரிவார்கள். பங்குக் குருக்களும், மறை ஆசிரியர்களுக்கு தகுந்த ஆலோசனைகள்கூறி, அவர்களை நன்முறையில் பயன்படுத்தி இறை யேசுவின் இனிய நற்செய்தியை பாரெங்கும் பரப்ப துணை புரிவார்களாக.

நிருபர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி
### புரட்டாசி—1969

| | | | |
|---|---|---|---|
| 28 | ஞாயிறு | பரி. ஆவி. விழா. பின் 18-ம் ஞாயிறு | [ப] |
| 29 | திங்கள் | புனித மிக்கேல் | [வெ] |
| 30 | செவ்வாய் | புனித ஜெரோணிமூஸ் | [வெ] |
| | | (ஐப்பசி) | |
| 1 | புதன் | கிழமைப்பூசை | [ப] |
| 2 | வியாழன் | காவல் தூதுவர் | [வெ] |
| 3 | வெள்ளி | புனித சின்னத் தெரேசாள். | [வெ] |
| 4 | சனி | புனித பிரான்சீஸ்கு அசிசி | [வெ] |

# காவலன் கருத்து

## உள்ளத்தில் இடமில்லையா?

பண்டைத் தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் இல்லறத்தானின் புனித தர்மமாக இருந்து வந்தது. வழிநடந்த களைப்பினால் வாடி, தங்க இடம்தேடி வரும் எவருக்கும் உணவும், உறையுளும் அளித்துவருவது மட்டுமல்லாமல் அகமும் முகமும் மலர்ந்து இன்சொல் உபசரித்து அனுப்புதல் அக்கால வழக்கம். அன்றைய சமூக அமைப்பில் இவ்விதமாகக் கையாளப்பட்டுவந்த இத்தர்மமானது இன்று அதைவிடப் பரந்தமுறையில் அனுசரிக்கப் படவேண்டிய ஒன்றாக இருக்கின்றது. அன்று இல்வாழ்வான் தொடர்புகொண்டு வாழவேண்டி இருந்தவர் சிலர். இன்றோ மிகப்பலர். அன்று இல்லத்தில் இடமளித்ததுபோல் இன்று உள்ளத்திலும் பிறருக்கு இடமளித்து ஆதரிக்கவேண்டிய கடமை யாவருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

நீண்டநேரம் பஸ்தரிப்பில் காத்துநிற்கிறோம். கடைசியாக ஒருபஸ் வருகிறது. ஆனால் அதில் இடமில்லை. எனவே, அது தரிப்பில் நிற்காது காத்திருந்தவரை ஏற்றாது சென்றுவிடுகிறது. காத்திருந்தவர்மனம் எப்பாடுபடும்; பஸ்ஸுக்காகக் காத்திருந்தவரைப் போலவே மற்றவரது அனுதாபத்திற்காக, ஆறுதல்மொழிக்காக, சிறு உதவிக்காக எத்தனையோபேர் காத்துநிற்கின்றனர். ஆனால் அவர்களைத் திரும்பிப்பார்க்கவும் அவகாசமின்றித் தரிக்காத பஸ்ஸைப்போன்று செல்லுபவர் உள்ளத்தில் பிறருக்கு இடம்எங்கே இருக்கப்போகிறது? அதுதான் சுயநலத்தால் நிரம்பி வழிகிறதே மற்றவர்களுக்குக் கைகொடுத்துதவ அவகாசமேது, நேரமேது? ஆனால் அந்த இடத்தில் அவர்களது உதவியே அத்தியாவசியமாக இருந்திருக்கவும் கூடும்.

எனவே பிறருக்குத் தம்உள்ளத்தில் இடமளிக்க வேண்டுமானால் ஒருவர் தமது சுயநலத்தைநீக்கி, அதற்கு இடம் ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். தமது வாழ்வின் வேகத்தைக் குறைத்துச் சூழஉள்ளோரை நோக்குதல்வேண்டும். அவர்களது அலுவல்களில், குடும்பத்தில், தொழிலில், விருப்பு வெறுப்புக்களில், கஷ்டதுன்பங்களில் உண்மையான கரிசனை எடுக்க வேண்டும். இன்றேல் ஒருவரைச் சரிவரப் புரிந்துகொள்ளவோ, அன்பு செலுத்தவோ, தக்கவாறு உதவவோ முடியாது. பிறர் நமது உள்ளத்தில் இடம்பெறவேண்டுமானால் அவர்களை எட்டத்தில் தடுத்து நிறுத்தக்கூடிய தற்பெருமை, வன்சொல், ஏளனம், பொறாமை போன்ற தீயபண்புகள் களையப்பட வேண்டும். விருந்தோம்புபவனின் மலர்ந்த முகமும் இனியசொல்லும் இங்கும் இன்றியமையாதவை.

புகையிரத நிலையத்தில் சுமைதூக்கும் கூலியாளைப் பிரயாணிகள் தேடுகிறார்கள். ஒருவருக்கு ஆதரவு அளிக்கும்போது, அக்கூலியாள் போலவே சற்றுநேரம் அவரது சுமைகளைத்தாங்கி அவர்சிறிது இளைப்பாற்றிபெற உதவிசெய்கிறோம். இளைப்பாறியபின் அவர்களே அச்சுமைகளைத் தூக்கிச் செல்லக்கூடிய வலிமைபெற்றுவிடுகிறார்கள்.

இவ்விதமாகச் செய்யப்படும் எந்த உதவியும், தாராள மனதுடன், பிறரைக் கடமைப்படுத்தும் நோக்கமின்றி, அவர்களது சுதந்திரத்தைப் பாதிக்காமல் இருக்கும்வரைதான் நன்மை பயப்பதாகும். ஒருவரது பேச்சுத்திறன், இனிய சுபாவம், உணர்வு, அவதானம் போன்ற இயற்கையான கொடைகள் பிறருடன் தொடர்பு கொள்வதற்குத் துணையாயிருந்த போதிலும், சுயநலமின்மையே அத்தியாவசியமானதாகும். தன்னைமுழுதும் வெறுமையாக்கினால் மட்டுமே பிறரது பிரச்சினைகளுக்கு எம்முள்ளத்தில் இடமிருக்கும்.

எனவே இறைவன் சந்நிதியில் முழந்தாட்படியிட்டு அவருக்காக அவர் அனுப்பும் சகலரையும் எம் உள்ளத்தில் வரவேற்போமென உறுதி கூறுவோமாக.

# உண்மைத் தெய்வம் கிறீஸ்துவுக்குச் சொல்லாலும் செயலாலும் சாட்சிபகர்வோம்

கிறீஸ்துவின் அரசைப் பரவச் செய்வதற்கும், திருச்சபையை வளரச் செய்வதற்கும், திருச்சபையின் மலர்ச்சிக்காலமாகிய இக்காலமே மிகத்தகுந்த காலமாகும்.

ஏனெனில் உலகம் விஞ்ஞானத்திலும், நவீன ஆராய்ச்சிகளிலும், தேவ உதவியைக் கைவிட்டு மனிதபலமே போதுமென்றாற்போல், ஆன்மசக்தியைக் கைவிட்டு அறிவுத்திறனை முன்வைத்து திசைமாறி ஓடுகிறது. இதைத் தடுப்பதற்கு நிச்சயமாகவே நம் கிறீஸ்தவர்களிடத்தில் சமயவளர்ச்சியாகிய ஞான வளர்ச்சி வேண்டும். இல்லாவிட்டால் நாம் பெலவீனர்களாகி, இருளின் பாதையில் வழிதவறி நடப்போம்.

இதனாலேயே நம் திருச்சபை, காலத்துக்கு ஏற்ற கோலம் போட்டு தன மக்கள் கெட்டழிந்து போகாமல் 2-ம் வத்திக்கான் சங்கம்மூலம், சில திருத்தங்களைச் செய்து, இளக்காரங்களைக் கொடுத்து, தாய் தன் பிள்ளையை அணைப்பதுபோல் அதிக இரக்கத்துடன், யாவரையும் தன்னிடமாய் அழைக்கிறது. விசேஷமாக, பிரிந்துபோன கிறீஸ்துவ சகோதரர்களையும், இன்னும் கிறீஸ்துவை அறியாத மக்களையும், தனது கதவுகளை அகலத்திறந்து வரவேற்கிறது. இவ்வித அழைப்பை ஆயரும், குருமாரும், சந்நியாசிகளும் மாத்திரமல்ல, பொதுநிலையினரும் ஒன்று சேர்ந்து, தமது தாராளமான உதாரகுணத்துடன் அழைக்கவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். தங்கள் சொல்லாலும், செயலாலும் கிறீஸ்துவுக்குச் சாட்சிபகர்ந்து உலகின் வெளிச்சமாகவும், உப்பாகவும் இருக்கவேண்டுமென நம் மீட்பர் விரும்புகிறார். பொதுநிலையினரே, உலகின் மத்தியில், கூடுதலாக நடமாடுகிறார்கள். தொழில் துறைகளில், பொது ஸ்தாபனங்களில், பாடசாலை, கடைத்தெரு, காட்சிச்சாலை, விவாக, மரண வீடுகள், யாத்திரை ஸ்தலங்கள், புகையிரதநிலையங்கள் முதலான இடங்களில் ஒருவர் ஒருவரைச் சுலபமாகச் சந்திக்க முடிகிறது. கலந்துரையாட வாய்ப்புக்கிடைக்கிறது. சொல்லாலும், செயலாலும், கிறீஸ்துவின் கிரிகைகளாகிய, கிறீஸ்துவ புண்ணியங்களை வெளியாகச் செய்யத் தருணம் வாய்க்கிறது. விசேஷமாக மருத்துவ நிலையங்களில் நோயாளரைச் சந்திக்கவும், ஆறுதல் சொல்லவும், சில உதவிகள் செய்யவும் சந்தர்ப்பம் கிடைப்பதால், தருணத்தைப் பயன்படுத்தி, வெகு சுலபமாக கிறீஸ்துவுக்குச் சாட்சிபகரலாமே! மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையில் இருந்து எவ்வித உதவியுமின்றித் தத்தளிக்கும் எத்தனை ஆன்மாக்களுக்கு நமது அன்பு கனிந்த வார்த்தைகளால் மோட்ச வீட்டை இலவசமாய்ப் பெற்றுக்கொடுக்கலாம்?

நம் தேவஅன்னை தேவை அறிந்து, தருணம் அறிந்து கானாஊர்க்கலியாண வீட்டில் தமது திருக்குமாரன் மெய்யான தேவசுதன் என்று, தண்ணீரைத் திராட்சரசமாக்கிய புதுமைமூலம் கிறீஸ்துவுக்குச் சாட்சிகொடுத்தா. அவ்வாறே நாமும் தருணம் அறிந்து சாட்சி பகராவிட்டால், எவ்வாறு மற்றவர்கள் கிறீஸ்துவை அறிவது? எவ்வாறு அவர்கள் நம் பரிசுத்த திருச்சபையிற் சேர்வது? இதைப்பற்றியே, பரி. பவுல் அப்போஸ்தலர் றோமருக்கு எழுதிய நிருபத்தில் பின்வருமாறு வசனிக்கிறார்.

(உரோமர். 10-ம் அதி. 14-ம் வச.) "தாங்கள் அறியாதவரை எப்படி விசுவசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?" என்று விசனத்துடன் கூறுகிறார். பரி. பவுல் அப்போஸ்தலர், சுவிசேஷக அருளப்பர், முதலியோர் கிறீஸ்துவுக்காகச் சீவித்து சொல்லாலும், செயலாலும் சாட்சி கொடுத்தார்கள். விசேஷமாக சுவிசேஷக அருளப்பர் வானமண்டலம் மட்டாய் உயர்த்தப்பட்டு, அங்கு தேவதூதரால் விளக்கப்பட்ட காட்சிகளையெல்லாம் கண்ணாரக்கண்டு, காட்சி ஆகமம் மூலம் எழுத்தில் நமக்கு சத்திய வாக்காய்த் தந்து போயிருக்கிறாரே! இதை வாசிக்கிறோமா? யோசிக்கிறோமா? சந்திர மண்டலம் போய்வந்த மூன்று அமெரிக்க வீரர்களையும், அவர்களின் ஒவ்வொரு செயல்களையும் இன்று அறியாத குழந்தைகள் கிடையா. பறைசாற்றி பதில்கேட்கும் பாமரர் கிடையா! கிறிஸ்தவர்களாகிய நாம் விஞ்ஞானிகளை ஆக்கியமெய்ஞ்ஞானியாகிய கிறீஸ்துவைப் பற்றி சாட்சி கொடுக்கிறோமா?

**நாதன்.**

# மணியோசை

### 6

ஐப்பசி மாதம் அன்னையின் மாதம். அன்னை தந்த முத்தாரத்தின் மாதம். அந்த ஆரம்; மனுக்குலத்தோரை மண்ணின்று விண்ணுக்கு இழுத்தெடுக்க மரியன்னை தொடுத்த ஆரம். ஜெபமாலை என்ற பெயரால் அழைக்கப் படும்உன்னத முத்தாரம்அது.

ஜெபமாலை சொல்வதில் இன்று களைப்படைகின்றனர் பலர். அடிக்கடி ஒரே ஜெபங்களை உச்சரிப்பதினால் அலுப்புத் தட்டுகின்றதெனக் கூறுகின்றனர். ஆயின் இது ஏற்றுக்கொள்ளத்தக்க தொன்றல்ல. இது ஒரு நீண்ட ஜெபம். முழுவதையும் சொல்வதற்கு நேரம் போதாது என்று சொல்லிக் கடத்துபவர்களும் உண்டு.

ஜெபமாலை என்பது ஒரு செபம். மனித தேவைகட்கு எல்லாக் காலத்துக்கும் எல்லாப் பருவங்கட்கும் பாவிக்கப்படத்தக்க பயனுள்ளதோர் செபம். ஒரு பெரும் பொறுப்பு எங்களைச் சேர்கிறது. அஞ்சி நடுங்க வேண்டாம். அன்னைமரி தூதனுக்குச்சொல்கிறாள் இதோ அடிமையென்று. இக்காரணிக்கத்தின் சரிதத்தை எண்ணிக்கொண்டே பத்துப் பிரியதத்தங்களைச் சொல்வோம். எம்மையறியாமலே புதுத்தென்பு உண்டாகின்றது. அவரின் சித்தத்துக்கு உரியவர்களாக நாம் மாறுகின்றோம்.

துன்ப துரிதங்கள் எம்மை நெருக்குகின்றன. இதோ ஜெத்சமனித் தோட்டத்தை எண்ணுவோம். முழங்காலில் நின்று விண்ணகத்தந்தையின் உதவியைக் கோரும் கிறிஸ்து நாதரைத் தியானிப்போம். குழந்தைகளின் செயல்களால் புண்பட்டு மனம் வருந்துகிறதா? ஜெருசலேமில் மூன்று தினங்கள் இரவுபகலாக யேசுவைத் தேடிய அன்னையை எண்ணிக்கொண்டு பிரியதத்தங்களை உச்சரிப்போம்.

அயலவரின் நிந்தனையால் உளம் வருந்துகிறோம். இருக்கவே இருக்கிறது முள்முடி சூட்டப்பட்ட காரணிக்கம். அயலவருடன் உறவாடுதற்கு உதவுகிறது எலிசபேத்தம்மாளை தேவதாய் சந்தித்தமை.

ஆம் களிப்பு, கவலை, ஆறுதல், இன்ப துன்பம் அனைத்துக்கும் இடந் தரும் ஜெபமாலை எங்கள் வாழ்வுக்கென்றே மோட்சத்திலிருந்து தரப்பட்ட ஒரு சர்வரோக நிவாரணி.

தமதிரித்துவத்தையும் நினைவு கூரச் செய்யும் திரித்துவ ஆராதனை, கிறிஸ்து போதித்த உன்னத ஜெபம், தேவதூதன் எலிசபெத்தம்மாள் திருச்சபை மூவராலும் தொகுக்கப்பட்ட பிரியதத்தம், பாத்திமாவில் அன்னை கற்பித்த அழகிய மன்றாட்டு இவ்வளவும் சேர்ந்த மணிமாலை தான் ஜெபமாலை.

ஜெபமாலை கையில் இல்லையா? பத்து விரல்களே போதும். நாள், இடம், காலம் தேவையில்லை. எந்தநேரத்திலும் எந்த இடத்திலும் தனித்தோ அல்லது பலர் சேர்ந்தோ ஜெபித்தற்குகந்ததே ஜெபமாலை.

இந்த ஐப்பசி மாதத்தில் தினசரி ஜெபமாலை சொல்வதாக ஒரு விதி செய்துகொள்வோம். அதை எந்நாளும் காப்பாற்றுவோம். அதனால் அன்னைமரியின் அன்பார்ந்த பிள்ளைகளாவோம்.

— மடோனா

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆ புரட்டாசிமீ 27ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org